விலை : 20.00
பக்கங்கள் : இருபது

R egistered as a N ewspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 16 வியாழக்கிழமை (01.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# இலங்கையின் தகவலை நிராகரித்தது கனடா!

பொது நலவாய மாநாடு குறித்து



கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொது நலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதை தான் உறுதிப்படுத்தியுள்ளதாக இலங்கை அரசாங்கம் வெளியிட்ட தகவலை கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் நிராகரித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் வெற்றி வடக்கிலும் தொடரும்!

### அமைச்சர் சுசில் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

ஏனைய மாகாண சபைகளை எவ்வாறு ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றி ஆட்சி அமைத்ததோ அதேபோன்று வடக்கு மாகாண சபையையும் வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கையுள்ளது என அக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு மூலமான பயன்களை த.தே. கூட்டமைப்பு வீணாக்குகிறது

### அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுவிட்டால் அரசியல் நடத்த முடியாது என்ற காரணத்தினாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் அதில் பங்குபற்றவில்லை என அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்பேசும் மக்களுடைய ஒரு உன்னதமான எதிர்காலத்திற்கு அடிக்கல்நாட்டும் நிகழ்வாக இந்த வடக்குமாகாண (19ஆம் பக்கம் பார்க்க)



## ஆளும் கட்சி வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பெயர் விபரங்களை அக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்தார்.

யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது இந்த பெயர் விபரங்களை அமைசசர் வெளியிட்டார்.

அதன் அடிப்படையில் சின்னத்துரை தவராஜா (முதன்மை வேட்பாளர்), அங்கஜன் ராமநாதன், நடராஜா தமிழழகன், கந்தசாமி கமலேந்திரன், ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன், சிவகுரு பாலகிருஷ்ணன், அலெக்சாண்டர் சூசைமுத்து, சுந்தரம் டிவகலாலா, அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின், கோடீஸ்வரன் ருசாங்கன், திருமதி ஞானசக்தி ஸ்ரீதரன், முடியப்பு றெமிடியஸ், (20ஆம் பக்கம் பார்க்க)

## ...பட விருதுக்கான போட்டிக்கு 'கொலைக்களங்கள்' தெரிவு!

(லண்டன்)

2013ஆம் ஆண்டுக்கான பிரித்தானிய ஆவணப்பட விருதுக்கான போட்டியில் கலும் மக்ரே தயாரித்த போர் தவிர்ப்பு வலயம் - இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படமும் தெரிவாகியுள்ளது.

பிரித்தானியாவின் 41-வது ஆவணப்பட விருதுக்கான இறுதிப் போட்டிக்கு 12 பிரிவுகளில் இருந்து 8 ஆவணப்படங்கள் தெரிவு செய்யப பட்டுள்ளன.

போர்தவிர்ப்பு வலயம் - இலங்கையின் (19ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

26 வயதுடைய இளைஞன் ஒருவரை கடந்த 3 மாதங்களாக காணவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அவரது மூத்த சகோதரனால் நேற்று முறைப்பாடு (19ஆம் பக்கம் பார்க்க)



இராணுவத்தின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க இராணுவத் தளபதிக்கான கடமைகளை நேற்று உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார். இதையடுத்து ஜெனரல் ஜகத் ஜயசூரிய இராணுவத் தளபதிக்கான கடமைகளை ஒப்படைத்தார்.

## புங்குடுதீவில் சடலம் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தை தோற்கடிக்க தமிழர்கள் முன்வரவேண்டும்

### அசாத் சாலி அழைப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தன் மானமுள்ள தமிழன் எவனும் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டான் என தமிழ் முஸ்லிம் கூட்டமைப்பின் தலைவரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதிநிதியும் தற்போது ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள வருமான அசாத் சாலி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றுகையில், அரசாங்கம் விரும்பித்தந்த தேர்தலாக இந்த வடக்குமாகாண சபைத்தேர்தல் இல்லை. சர்வதேச அழுத்தத்தின் காரணமாகவே இந்த தேர்தல் நடைபெறவுள்ளது.

அரசின் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிச்சக்கரவண்டியில் வெளிச்சம் இல்லை
# 20 நபர்களுக்கு நீதிமன்றம் 40 ஆயிரம் ரூபா அபராதம்!

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் இரவு நேரத்தில் துவிச்சக்கர வண்டிக்கு வெளிச்சமின்றி சென்ற 20 நபர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தர விட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் சம்பவ தினம் இரவு வேலையில் துவிச்சக்கர வண்டிக்கு வெளிச்சமின்றி சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு பதியப்பட்டது.

இவ் வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாகக் கண்டு இருபது பேருக்கும் தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (செ-9,24)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது(செ-5)

## நல்லூர் கோட்ட அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று பிற்பகல் 12.30 மணியளவில் நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்டப்பதில் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் கேட்டுள்ளார். (ந)

# கணனி விற்பனை நிலையத்திற்கு எதிராக முறைப்பாட்டு மனு இன்று கையளிப்பு

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலிப் பகுதியில் உள்ள கணனி விற்பனை நிலையமொன்றுக்கு எதிராக யாழ்ப்பாணம் செயலகத்தில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு சபையில் இன்று முறைப்பாட்டு மனு கையளிக்கப் படவுள்ளது.

குறித்த கணனி விற்பனை நிலையம் கூறுவிலைப்பட்டியலில் குறிப்பிட்டதுபோல, கணனிக்கான உதிரிப்பாகங்களைப் பொருத்தவில்லை எனவும், கணனி விற்பனையின் போது வழங்கப்பட்ட உத்தரவாதத்தை சரியான முறையில் நிறைவேற்றாமல் ஏற்கெனவே பழுதடைந்து திருத்தப்பட்ட உதிரிப்பாகங்களைப் பொருத்தியது உள்ளிட்ட குற்றச் சாட்டுக்கள் இந்த முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த கணனி நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சட்ட நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கான விற்பனைச் செயற்பாட்டுக்கு அவசியம் எனக் கருதப்படுகின்றது. (ந)

# உரிமை கோரப்படாது 3 சடலங்கள்

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதுவரையில் யாராலும் உரிமை கோரப்படாத நிலையில் காணப்படும் 3 சடலங்களை அடையாளம் காண உதவுமாறு யாழ்.போதனா வைத்தியாசாலை பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்படி பெயர், முகவரி தெரியாத 45 முதல் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் உடலம் கடந்த யூலைமாதம் 25-ம் திகதி நெடுந்தீவு பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இது வரையாராலும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

மேலும் பெயர், முகவரி தெரியாத ஆணா, பெண்ணா என இனங்காணமுடியாத நிலையில் சடலம் ஒன்று கடந்த யூலை மாதம் 21-ம் திகதி அன்று வட்டுக்கோட்டை பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது போன்று பெயர், வயது, முகவரி தெரியாத ஆணா, பெண்ணா என இனங்காண முடியாத நிலையில் கடந்த யூலை மாதம் 28-ம் திகதி அன்று நெடுந்தீவு பொலிஸாரால் மற்றுமோர் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அடையாளங்காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள குறித்த 3 சடலங்களையும் உறவினர்கள் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் கோரியுள்ளார். (செ-5)

# இந்திய மீனவர்கள் 34 பேர் இலங்கை கடற்படையினால் கைது

தமது கடல் எல்லையைத் தாண்டி சட்ட விரோதமாக ரோலர் படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 34 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்றுமுன் தினம் கைது செய்துள்ளதோடு 5 ரோலர் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 34 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்த இந்த 34 இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளதாக வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத் தலைவர் வை.அருள்தாஸ் தெரிவித்தார்.

இந்த 34 இந்திய மீனவர்களும் 5 ரோலர் படகுகளில் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் 5 ரோலர் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பின்னர் இவர்கள் அனைவரும் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கினை விசாரித்த நீதவான் அனைவரையும் எதிர்வரும் 7-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை முல்லைத்தீவு கிழக்கு பகுதியில் 4 ரோலர் படகுகளுடன் இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் அறிவித்துள்ளனர். (செ-6,24)

## கௌரவிப்பு விழா

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய கௌரவிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும், வடமாகாண கல்வி அபிவிருத்திக்கு குழுவின் தலைவருமான சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், ஜே/82 பிரிவு கிராமசேவகர் நா.சுபாரட்ணம், கௌரவ விருந்தினர்களாக கெ.சண்முகலிங்கம், ந.ஜெகன்மோகன், இ.சிவநேசன் ஆகியோர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (செ-5)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே.: 021 321 0815
E-mail : valampurii@yahoo.com

## பரிசளிப்பு விழா

யா/கைதடி குருசாமி வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலையின் வித்தியாலய அதிபர் திருமதி ப.செல்வநாயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற தென்மராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கல்வி அமைச்சின் ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி வே. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் தா.கணேசலேந்திரன், பண்டாரவளை கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், பாடசாலை நலன்விரும்பி, அ.வீரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (செ-5)


## முதுநிலை தியானப் பயிற்சி



மன அழுத்தம், கோபம், நோய்கள் குறைய
ஆரோக்கியம், நிம்மதி, செயல்திறன், மகிழ்ச்சி கூட
தெளிவான மனம், இனிதான உறவு அமைய

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
"ஆனந்த அலைகள்"
பயிற்சியில் பங்கு கொள்வீர்!
அனைவரும் எளிதில் பயிலக்கூடிய
யோகாசனங்கள்,
பிரணாயாமம், தியானம் மற்றும் "சுதர்ஷனக்கிரியா" எனும்
அற்புதமான மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது.

காலம்:
01.08.2013 வியாழக்கிழமை முதல்
04.08.2013 ஞாயிற்றுக்கிழமை வரை

நேரம்:
காலை 6-8.30 மணி/
பகல் 10.30-1 மணி/
மாலை 5-8.30 மணி

இடம்: யாழ் நிலையம், 254 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(கலட்டிச் சந்திக்கு அருகாமையில்)

1.8.2013 வியாழக்கிழமை மாலை 6-8 மணிக்கு இலவச அறிமுக உரை, தியானம், குருஜியின் காணொளிச் சொற்பொழிவு மற்றும் சத்சங்கம் நடைபெறும்.

பங்கு கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:
(இ) 0775071363,0754303380



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப்பீட மாணவர்களில் இராமநாதன் நுண்கலைக்கழகம் தவிர்ந்த மூன்றாம் நான்காம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவதற்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாணவர்களில் விடுதியில் தங்கும் மாணவர்கள் 31.07.2013 நண்பகல் 12 மணியிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் விடுதியைவிட்டு வெளியேறுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ் விதியை மீறி பல்கலைக்கழக வளவினுள்ளோ பல்கலைக்கழக விடுதியினுள்ளோ உட்பிரவேசித்தால் பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுக்காற்று விதிகளின் அடிப்படையில் அவர்களின் பல்கலைக்கழக பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

பதிவாளர் (சி-4185)



## கோயில் உதவியாளர் தேவை

இணுவில், திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலயத்துக்கு ஆச்சாரமுள்ள கோயில் வேலை தெரிந்த உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரையும் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

கே.கே.எஸ்.வீதி, இணுவில், மருதனார்மடம். (3511)



## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm

12 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு: 160/- அசைவ உணவு 185/-

(C-4173) தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## 197ஆவது வருட நிறைவு
## நிறுவுனர் தினம் – ஆகஸ்ட் 01

இன்று 01.08.2013 இல் 197 ஆவது அகவையை நிறைவு செய்யும் எமது கல்லூரியின் புகழ் மேலோங்க மத்தியின் மைந்தர்களாகிய நாம் அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'

யாழ்.மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.

(C-4189)



## தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C-4172) T.P. No.:- 021 222 5392


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிரிப்பு வைத்தியம்

நல்லா சிரிக்க கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கு நோய் வராது.

இதை காலங்காலமாக வைத்தியர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இப்போது அழுத்தமாக வலியுறுத்தி சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

சிரிப்பு என்பது நோய் வராமல் தடுப்பதற்கு மட்டும் இல்லை. நோய்களைக் குணமாக்கவும் செய்கிறது. அதனால்தான் இன்றைக்கு நவீன மருத்துவ முறை சிரிப்பை... நோய்களைக் குணமாக்கும் என்று வைத்தியர்கள் கூறியுள்ளார்கள்.

நோயை வராமல் தடுக்கும் ஒரு முறையாக... அதாவது Therapen Tic Factor ஆக அங்கீகரிக்கும்.

ஆம்ஸ்டர்டாம் நகரத்தில் "தயான் ஆட்டோரியஸ்" என்றொரு வைத்தியர் இருந்தார். அவர் ஒரு சிரிப்பு மையத்தை ஆரம்பித்து அமோகமாக, விலாசமாக இருந்தார். அண்மைக்காலமாக அவரது சிரிப்பை பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிரிப்பு வைத்தியம் செய்த பின் அவர்களாலே பல பேருக்கு கோபத்தின் அளவு மிகவும் குறைந்துள்ளது.

British Journal of the Royal College General Practitioners அதுவே சிரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒப்புதல் செய்திருக்கிறது.

அதனாலே இனிமேல் சிரிப்பும் ஒரு வைத்தியம் தான் அல்லோபதி,ஹோமியோபதி என்ற மாதிரி இது Humouropathy.

மன அழுத்தம் என்பது பலவிதமான நோய்களை உண்டாக்கும்.

அதிகபடியான இரத்த அழுத்தம், இதய நோய்கள், மன உளைச்சல், நரம்பு தொடர்பான கோளாறுகள் இப்படியாக பல நோய்கள்.

மன அழுத்தம் காரணமாக தோன்றும் நோய்கள் சில நேரங்களில் புற்றுநோயை தோற்றுவிக்கும் என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

இதற்காகத்தான் மன அழுத்தத்தை விரட்ட வாய் விட்டு சிரிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

தற்போது அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளிலே நகைச்சுவை மூலமாக நோயை கட்டுப்படுத்த சிரிப்பு சிகிச்சை அளிக்கிறார்கள்.

இந்த சிகிச்சை நிலையம் தற்போது இங்கும் ஆரம்பமாகியுள்ளது.

அத்துடன் நகைச்சுவை சங்கங்கள் அமைத்துள்ளார்கள்.

வேறு சில நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

சிரிக்கும் போது இரத்த ஓட்டம் அதிகமாகும். சமிபாடு அடையும் சக்தி அதிகமாகிறது.

இரத்தத்திலே சீனியின் சத்து விரைவில் கரைகிறது. குலுங்கிக்குலுங்கி சிரிக்கிறவர்களுக்கு குடல் நோய் வருவதில்லை. சிரிக்கும் போது நுரையீரல்களில் அதிக பிரபலமான பிராணவாயு வெளியேறுகிறது.

சிரித்துமகிழ்ந்து இருக்கிறது முகப்பருவிற்கு மருந்தாக அமைகிறது. இதுவொரு மருந்துவக் குறிப்பு என்றும் கூறப்படுகிறது.

அதனாலே எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பது உடலுக்கு சிறந்த நிவாரணியாகும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நேர்மையான அரசியல்வாதியை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்

## ஐ.தே.க.முதன்மை வேட்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியானதாக இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் சகோதரருமான தி. துவாரகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, நேற்றைய தினம் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவை யாழ்.மாவட்ட செயலகத்தில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுவாமிநாதன் மற்றும் முதன்மை வேட்பாளர் ஆகியோருடன் இணைந்து தாக்கல் செய்தது.

இதனையடுத்து மாவட்ட செயலகத்தின் பிரதான நுழைவாயிலில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதியான ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்க நாம் தயாராகிக் கொண்டிருக்கின்றோம். இந்தத் தேர்தலிலே எமது முக்கிய குறிக்கோள் அதாவது வடமாகாண சபைத் தேர்தலில் முதற்படியான ஆணை, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நோக்கியதாகவும் தமிழர்களுக்கான ஒரு சுயாட்சியை நோக்கிய தீர்வை நோக்கிச் செல்வதாகவும் இருந்த போதிலும் அனைத்து வடக்கு மாகாணசபை வாக்காளர்களும் நீதியான, நேர்மையான ஒரு மாகாண சபை உறுப்பினர் ஒருவரைத் தேர்தலில் தெரிவு செய்வதற்கு முன்வரவேண்டும்.

இந்தத் தெரிவின் பின்னர் இங்கு நடைபெறவிருக்கும் எந்தவொரு சம்பவத்திற்கும் மக்களையோ, ஊடகங்களையோ குற்றம் கூறுவதில் எந்தவிதப் பயனுமில்லை.

எனவே நேர்மையான புதிய முகங்களைத் தெரிவுசெய்து மாகாண சபையை புதிய அரசியல் கலாசாரத் தோடு இன, மத, மொழி வேறுபாடின்றி முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# வலிகாமம் கிழக்கில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கபே அமைப்பின் அனுசரணையுடன் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்திலும் மறுநாள் திங்கட்கிழமை அச்சுவேலி கலாமினி மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் அடையாளஅட்டைக்கு புதிதாக விண்ணப்பிக்க முடியும் எனவும் தொலைந்தமைக்கான விண்ணப்பங்கள் மற்றும் பழுதடைந்த அல்லது திருத்தத்துக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விண்ணப்பங்களை மேற்கொள்பவர்கள் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் உட்பட தேவையான சகல ஆவணங்களையும் எடுத்து வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் அறிக்கை, சத்தியக்கடதாசி, புகைப்படம், முத்திரை என்பவற்றை அன்றைய தினத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இதன் போது அரச உத்தியோகத்தர் மற்றும் ஓய்வூதியர்களுக்கான விசேட கருமபீடம் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்வில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய | 70 | 120 | 80 |
| தக்காளி | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 100 |
| கரட் | 140 | 140 | 160 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140-180 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | — | 120 |
| பயற்றங்காய் | 20 | 40 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 70 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 120 |
| போஞ்சி | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | [illegible] | 120 | 120 |

# இராசி பலன்

01.08.2013
(ஆடி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி மாலை 6.55 மணிவரை
கார்த்திகை முற்பகல் 8.57 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை

**மேடம்** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், யோகமான நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் நாள், சில விவாதங்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், பல நாட்களால் பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, கூடுதல் பொறுப்புக்களால் பம்பரமாக சுழன்று பணிபுரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும், சஞ்சலங்கள் கூடும்.

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு, அதிர்ஷ்டகரமான நாள், உறவினர் வருகை யால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்** செய்தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், சாமர்த்தியமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்பத்தினரிடம் கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம்.

**விருச்சிகம்** தொழில் நலன்கருதி புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களுக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

**தனுசு** பழைய கடன்களை அடைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** மனதில் தோன்றுவதை செய்ய முற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தேர்தல் காலங்களில் மட்டும் மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறது

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இன்று நாட்டில் காணப்படும் மக்களின் பிரதான பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கட்டாயம் இருந்தும் இவற்றை அரசாங்கம் பொருட்படுத்தாது ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றது. தேர்தல் காலங்களில் மட்டும் மக்களுக்கு நிவாரணங்கள் கொடுப்பதால் மக்களின் பிரச்சினைகள் தீரப் போவதில்லை என ஐ.தே.கவின் ஊடக பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

இராஜகிரியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு அரசாங்கத்தை கொண்டு செல்ல ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் ஆட்சி இருப்பினை தக்க வைத்துக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களே தேவைப்படுகின்றனர். அரசாங்கத்தில் இருப்பவர்கள் இன்று ஒருவர் மீது ஒருவர் குற்றங்களைச்ள சுமத்திவிட்டு தம்மை நியாயப்படுத்தும் செயற்பாடே இன்று காணப்படுகின்றது.

மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டிய இத் தருணத்தில் கட்சிவிட்டு கட்சிக்குதாவும் அரசியல் வாதிகளினால் மக்களின் நம்பிக்கையையும் எதிர்ப்பையும் இழக்க நேரிடுகின்றது.

அரசாங்கத்தில் இருக்கும் அங்கத்தவர்கள் மீது ஜனாதிபதி மஹிந்து ராஜபக்ஷவிற்கே நம்பிக்கை இல்லாது போய்விட்டது. அதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பி னர்களை நம்பி அவரது அரசாங்கம் தேர்தல் களத்தில் குதிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஒருவர் இருவர் அரசாங்கத்துக்கு தாவுவதால் ஐக்கிய தேசியக் கட்சி கவிழ்ந்துவிடப் போவதில்லை. அதேபோன்று தயாசிறி அரசாங்கத்திற்கு போனமையால் நாட்டின் பிரச்சினைகளோ மக்கள் படும் கஷ்டமோ தீரப்போவதில்லை.

மேலும் இன்று நாட்டில் காணப்படும் மக்களின் பிரதான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திடம் இருந்தும் இவற்றை பொருட்படுத்தாது ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் மட்டும் மக்களுக்கு நிவாரணங்கள் கொடுப்பதால் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

இன்று நாட்டில் பிரதானமான அரச நிறுவனங்கள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. இலங்கை போக்குவரத்து சபை, மின்சார சபை, மிகின் லங்கா சேவை மற்றும் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் என்பன நாட்டின் பிரதான பங்கினை வகிப்பதாக அரசாங்கம் கூறிய போதிலும் இன்று அவை 13 ஆயிரத்து 200 கோடி ரூபாய்கள் நட்டமடைந்துள்ளன.

அவற்றை ஈடுசெய்வதற்கு மக்களின் பணமே சுரண்டப்படும். இலங்கையின் எதிர் காலத்தில் சந்ததியினர் கடன்காரர்களாக பிறக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமைக்கு இன்று அரசாங்கம் நாட்டைக் கொண்டு வந்துள் ளது.

மக்கள் இன்று அரசாங்கத்தின் கொடுமைகளையும் பொய்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை. இனியும் இந்த மோசமான ஆட்சியில் மக்கள் வாழவும் விரும்பவில்லை.

இம்முறை மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் மக்கள் தமது மனதில் உள்ள வெறுப்பையும் கோபத்தையும் நிச்சயம் வெளிப்படுத்துவார்கள்.

இம்முறை தேர்தலில் மக்களிடம் இருந்து அரசாங்கம் நல்ல பாடத்தை படித்துக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வடக்கு மாகாண சபை தேர்தலில் நாம் யாரையும் ஆதரிக்கவில்லை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)



வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாது என்பதை மீண்டும் உறுதிப்படுத்திய அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுயேட்சைக் குழுக்களையும் தாம் ஆதரிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமது கட்சி மாகாண சபை முறைமையை முற்றுமுழுதாக புறக்கணிப்பதாகவும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழுவிற்கு ஆதரவு அளிக்கப் போவதாகவும் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கமும் அதனுடைய சர்வதேச ஆதரவு சக்திகளும் தமிழ் அரசியலின் தேசியவாதச் சிந்தனையை இல்லாது ஒழித்து 13 ஆம் திருத்தத்திற்குள்ளும் மாகாண சபை முறைக்குள்ளும் முடக்கும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணிப்பதான அறிவிப்பை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்துகின்றது.

இலங்கைத் தீவின் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயகபூமி என்பது எமது திண்ணமான நிலைப்பாடு. தமிழர் தேசத்தை இருகூறிட்டு வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி தமிழ் மக்களின் தேசிய அரசியலை வட மாகாணத்திற்குள் முடக்கிவிட அரசாங்கம் கங்கணம்கட்டி நிற்கின்றது.

எமது சம்மதமின்றி எம்மீது திணிக்கப்பட்ட ஓர் அரசியல் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. அதனைத் தொட்டுப்பார்க்கத் தயாராகவும் இல்லை.

மாகாண சபை முறைக்கு அங்கீகாரம் வழங்குவதை எத்தகைய காரணங்களாலும் நியாயப்படுத்திவிட முடியாது என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. இது எமது தேசிய உரிமைப் போராட்டத்தின் ஆன்மாவை உலுக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

வெளிச் சக்திகள் தத்தமது நலன்களை இத்தீவில் நிலைநிறுத்திக் கொள்வதற்காக இத்தேர்தலில் தமிழ் மக்களை முழுமையாகப் பங்கேற்க வைத்து மாகாண சபையைத் தீர்வாக ஏற்றுக் கொண்டுள்ளனர் எனக் காண்பிக்க முயல்கின்றன. அந்த யதார்த்தத்தை உணர்ந்து தமிழ் மக்களின் நலன்களை மையமாக வைத்து இத்தேர்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையாக புறக்கணித்து நிற்கின்றது.

எமது ஆதரவு எந்த ஒரு கட்சிக்கோ, சுயேட்சைக் குழுவிற்கோ இல்லை. நாம் இத்தேர்தலில் தம்மை ஆதரிப்பதாக கூறுபவர்களிடத்தில் விழிப்பாக இருக்குமாறு தயவாக வேண்டுகின்றோம். இத்தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் மாகாண சபைகளைத் தமிழ் மக்கள் தீர்வாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என யாரும் காட்ட முற்படின் அதனை 26 ஆண்டு காலம் மாகாண சபைகளை நிராகரித்து நடைபெற்ற உரிமைப் போராட்டத்தில் உயிர் நீர்த்த அனைத்து ஆன்மாக்களுக்கும் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகவே நாம் பார்க்கின்றோம்.

இத்தேர்தலில் பங்கு பற்றுவதா? வாக்களிப்பதா? யாருக்கு வாக்களிப்பது? போன்ற தீர்மாணங்களை நாம் ஒவ்வொரு தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கும் விட்டுவிடுகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் அக்கட்சியின் பொதுச் செயலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், அக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான மணிவண்ணன் ஆகியோர் பங்கு கொண்டனர். (அ-6)

# கணிதத்துறையின் கலங்கரை விளக்கு எஸ்.வி.மகேந்திரன்



யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் கணிதத்துறையின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.வி. மகேந்திரன் அவர்கள் இன்று அகவை அறுபதைப் பூர்த்தி செய்து பணியில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கணிதத்துறையின் ஆசானாக இருந்த எஸ்.வி.மகேந்திரன் அக்கல்லூரியில் பிரதி அதிபராக, பதில் அதிபராகக் கடமையாற்றி கொக்குவில் இந்துக் கல்லூரியின் உன்னதமான வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

அவரிடம் கற்ற மாணவர்கள், நாட்டின் பல பாகங்களிலும் வெளிநாடுகளிலும் பொறியியலாளர்களாக, கணித விற்பன்னர்களாக விளங்குகின்றனர் என்ற உண்மை எஸ்.வி.மகேந்திரனின் கணித அறிவியலுக்குத் [illegible].

கணிதம், தகவல் தொழில்நுட்பம், கல்வி முகாமைத்துவம், பொதுநிர்வாகம் ஆகிய துறைகளில் சமகால இற்றைப்படுத்தலில் தன்னை மிக உச்சமாகத் தயார்ப்படுத்திய எஸ்.வி.மகேந்திரனுக்கு நிகர் அவர் என்றே கூறவேண்டும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அனுபவப் பகிர்வில் எஸ்.வி.மகேந்திரனின் நேரமுகாமைத்துவம், நேர அட்டவணைக்கான ஒழுங்குபடுத்தல், பரீட்சை ஏற்பாடுகள், கற்பித்தல் நுட்பம், வகுப்பறை முகாமைத்துவம், நிர்வாக ஒழுங்கு என்பன மறப்பதற்குரியவை அல்ல.

தான் சார்ந்த துறையில் நிபுணத்துவம் பெற்றிருப்பது நேர்மையான பணிக்கு மிகவும் அவசியம் என்பது அவரின் தாரகமந்திரம். அதுவே எஸ்.வி.மகேந்திரன் என்ற உன்னதமான கணித ஆசானை யாழ்ப்பாண மண்ணுக்குத் தந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் பதவியுயர்வு பெற்ற அவர், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கணிதத்துறைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாண வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம் ஏற்பட்டபோது கணிதத்துறை சார்ந்தோர் எஸ்.வி.மகேந்திரனே அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் எனக் கருதி அந்தப் பதவியில் அவரை அமர்த்தினர்.

தனது பணியைச் சிறப்பாகச் செய்து முடித்த எஸ்.வி. மகேந்திரனின் அர்ப்பணிப்பான சேவை கல்விப்புலத்தின் ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவாகும்.

- விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.புகலிடக்கோரிக்கையாளர்கள் விரைவில் நாடுகடத்தப்படவுள்ளனர்

## ஆஸி.தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**கொக்கோஸ் தீவிலிருந்து அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 68 சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் எதிர்வரும் சில தினங்களில் இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருப்பதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.**

கொக்கோஸ் தீவிலிருந்து விமானம் மூலம் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த இவர்கள், விசாரணைகள் மற்றும் அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. இந் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்கள் என்றும் எதிர்வரும் சில தினங்களில் இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இக்குழுவினர் விசாரணை மற்றும் அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பப்புவா, நியூகினி ஆகிய தீவுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர். இவர்கள் அவுஸ்திரேலியாவிலோ அல்லது பப்புவா நியூகினி தீவிலோ குடியமர்த்தப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என குடி வரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்கள் அங்கு தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவ்வாறானவர்களை பப்புவா நியூகினி தீவுக்கு அனு ப்புவது தொடர்பில் கடந்த 19 ஆம் திகதி இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைய முதலாவது குழுவினர் பப்புவா நியூகினிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோத படகுகள் மூலம் வரும் இலங்கையர்கள் தாமாக முன் வந்து நாடு திரும்பாவிட்டால், அவர்கள் பப்புவா நியூகினி தீவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சித்திர பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தினால் பாடசாலை விடுமுறை காலத்தில் நடத்தப்படும் விடுமுறை கால சித்திரப் பயிற்சி முகாம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இப் பயிற்சி முகாம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (அ-5)

## பெற். கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி விலகினார்

இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பெற்றோலியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திலக் கொள்ளுரே இவ்வாறு பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பதவிவிலகல் கடிதத்தை பெற்றோலிய வள அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா விடம் கொள்ளுரே ஒப்படைத்துள்ளார்.

இதேவேளை, தரம் குறைந்த 35 ஆயிரம் தொன் எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 35 ஆயிரம் மெற்றிக் தொன் எடையுடைய பெற்றோல் தரம் குறைந்தவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெற்றோலில் உரிய அளவில் ஒக்டேன்கள் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் பெற்றோலியம் சய்னா என்னும் நிறுவனத்திடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. (அ-2)

விபத்துக்குள்ளான ஆஸி. படகில்

## வராத்துப்பளையை சேர்ந்தவர்களும் பலி!

(கரவெட்டி)

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகின் மூலம் செல்ல முற்பட்ட பருத்தித்துறை வராத்துப்பளை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்தோனேசியா கடற்பரப்பில் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளாா.

கடந்த 24 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்வதற்காக இந்தோ னேசியா கடற்பரப்பினூடாக பயணித்துக் கொண்டிருந்த வேளை படகு பாறையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் 3 வயது குழந்தை ஒன்றும் பருத்தித்துறை வராத்துப்பளை பகுதியைச் சேர்ந்த அருமைத்துரை றொணள்ட் (றீகன்) வயது 33 என்பவரும் உயிரிழந்துள்ளனர். சடலம் இந்தோனேசிய கடற்படையினரால் மீட்கப்பட்டு நேற்று புதன்கிழமை நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க இந்தோனேசியாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (அ-2)


## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**திரு.எஸ்.வி.மகேந்திரம்**

உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் ஐந்து ஆண்டுகள் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சிறப்பாகச் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு.எஸ்.வி.மகேந்திரம் அவர்கள் தம் ஓய்வுக் காலத்தினை குடும்பத்தினருடன் சிறப்பாகக் களிக்கவும் நீண்ட ஆயுளைப் பெற்று வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வி அபிவிருத்திப் பிரிவினர்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(3507)


## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப் பெருமானின் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு, சின்மயா மிஷன் யாழ்ப்பாணக் கிளையினால் சைவச்சிறார்களுக்கான மாபெரும் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது ஓகஸ்ட் மாதம் 1-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதி வரை வலம்புரி நாளிதழில் வரும் கேள்வி, பதில் துணுக்குகளை வெட்டி ஒரு அப்பியாசப்புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி செப்ரெம்பர் 1-ம் திகதி மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கவும். கையளிக்கப்படும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்குச் சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் பூங்காவனத் திருவிழா வன்று வழங்கப்படும். 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இதில் கலந்து கொள்ளலாம். காத்திருங்கள் ஓகஸ்ட் 1-ம் திகதிக்கு....

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம். (இ)


வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்

### தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷியின் முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகா வழங்குபவர்

மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி A.சுப்பையா நாயுடு அவர்கள் இந்தியா

**ஆளுமை திறனூக்கப் பயிற்சி (ஆரம்ப பயிற்சியாளர்களுக்கு)**

உடல், உயிர், மனம், அறிவு மற்றும் சமுதாய வாழ்க்கை நலம் பற்றிய கருத்தும் பயிற்சியும் வழங்கப்படும்.

**03.08.2013 சனிக்கிழமை 5 மணி இலவச அறிமுக உரையும், பதிவு செய்தலும்**

**04.08.2013 ஞாயிறு 4 மணி - காயகல்பம் -விளக்கமும் பயிற்சியும்**

**05,06,07,08 திகதிகளில் 4 மணி- 6வரை நோயில் இருந்து விடுபடுவதற்கான பயிற்சிகளும் மன அழுத்தம், இறுக்கம் (டென்சன்) குறைப்பதற்கான தியானப் பயிற்சிகளும் நடைபெறும்.**

**இடம்: அருளகம்,** 14/4, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(Near the Sanjuraniyar Church, Hospital Road)

தினமும் காலை 8.30 - 1 மணிவரை 1 ஆம், 2 ஆம், 4 ஆம் அகத்தாய்வு பயிற்சிகள் நடைபெறும். ஏற்கனவே பயிற்சி முடித்தவர்களும் மீள் பயிற்சியில் கலந்துகொள்ளலாம். கட்டணம் இல்லை. மேலதிக விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும். தொடர்புகளுக்கு : 021 320 2286 (3492)

எதிர்வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி முதல் வேதாத்திரி உள்ளுணர்வு கல்வி (Vision for wisdom) நடாத்தும் படிப்புகள் - 2013/ 2014 சான்றிதழ் (Certificate) பட்டயம் (Diploma), சிறப்புப்பட்டயம் (Advance Dip) ஆரம்பம்.



### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'7"கி.பா:26.25செவ் 1<br>தகைமை/தொழில்: BSc (Hons)Quantity Surveyor, Cost Engineer (Burunei Work Permit)<br>தொ.இ:B2122 | பிறப்பு: 1989 இந்து(V)<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா : 31 செ 12<br>தகைமை/தொழில்: A/L, UK Student Visa<br>தொ.இ:G2153 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'8" கி.பா:56.25<br>தகைமை/தொழில்: BCS Financial Business Management)UK Student Visa (இரண்டு வருடங்களில் PR கிடைக்கும்)<br>தொ.இ:B2123 | பிறப்பு: 1980 இந்து(Na)<br>நட்சத்திரம்: அனுசம் கி.பா:108<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/Lஆசிரியை<br>தொ.இ:G2157 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'5" கி.பா:21செவ் 4<br>தகைமை/தொழில்: A/L, Malaysia Work Permit<br>தொ.இ:B2125 | பிறப்பு: 1991 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா :10.25 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.A<br>தொ.இ:G2158 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>4உயரம்: 5'5" கி.பா : 74<br>தகைமை/தொழில்: O/LUK (Not PR)<br>தொ.இ:B2126 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா : 18.25 செவ் 2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Diploma in AccountingCanada Citizen<br>தொ.இ:G2159 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி , மக்கள் விடுதலை முன்னணி என்பன தாக்கல் செய்தன.
(படங்கள்:- எஸ்.ஆர். கரன், பூந்தோட்டச் செய்தியாளர்)

# வடக்கு மாகாண தேர்தலில் போட்டியிட கட்சிகள் நேற்று வேட்புமனுத்தாக்கல்

## ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம்

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆளும்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்பன நேற்று தாக்கல் செய்தன.

பட்டாசு சத்தங்கள் முழங்க மங்கள வாத்தியத்தோடு பாண்ட் வாத்திய இசையும் ஒலிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் மற்றும் அமைச்சர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வீதியில் பவனியாக அழைத்து வரப்பட்டு வேட்புமனுவை முற்பகல் 11.30 மணியளவில் தாக்கல் செய்தனர்.

இதற்கு முன்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான வேட்புமனுவை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுவாமிநாதன் தலைமையிலான குழுவினர் தாக்கல் செய்தனர்.

அத்தோடு மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் பி.நடராஜா மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பங்குகொண்டு வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

இதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் வேட்பு மனுத்தாக்கலின் போது பங்கு கொண்டனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட 6 கட்சிகளும் 5 சுயேட்சை குழுக்களும் ஏற்கனவே வேட்புமனுவை தாக்கல் செய்திருந்த நிலையில் நேற்றைய தினம் பிரதான மூன்று கட்சிகள் வேட்புமனுவைத் தாக்கல் செய்தன.

குறிப்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் வேட்புமனுத்தாக்கல் செய்ய ஆரவாரத்துடன் வருகை தந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதனால் மாவட்ட செயலக பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியதோடு பட்டாசுச் சத்தங்களால் அலுவலகப்பணிகளும் சிறிது நேரம் தடைப்பட்டன. அரசாங்க அதிகாரிகளும் தேர்தல் கொண்டாட்டத்தில் ப்ங்குகொண்டிருந்தனர்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட் டுக்கொண்டிருந்தபோது எதிர்க்கட்சியினரும் (ஐ.தே.க) அவ்விடம் வருகைதந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதுதவிர ஐக்கிய தேசியக் கட்சியினர் மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுவைத்தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்துக்கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத வகையில் அங்கு வருகைதந்த ஆளும்தரப்பினர் ஆரவாரம் செய்ததோடு ஐ.தே.கவினர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிப்பதை உடன்நிறுத்தி விலகிச் சென்றனர்.

இவ்வாறுநேற்றையதினம் மாவட்டச் செயலகம் தேர்தல் கொண்டாட்டங்களால் களைகட்டியிருந்தது. இதுதவிர காப்பெற் வீதிகளில் கற்பூரம் ஏற்றுவதற்கே தண்டவிதிக்கப்பட்டுள்ள நிலையில் பெருந்தொகையான பட்டாசுகள் வீதிகளில் வைத்து வெடிக்கப்பட்டன. இதனால் வீதிகளெங்கும் புகைமூட்டம் காணப்பட்டதோடு வீதியோரங்களில் காகிதத் துண்டுகளும் மலைபோல குவிந்து கிடந்தன. மேலும் பெருமளவான மக்கள் வீதியில் ஒன்றுகூடி நின்றமையால் போக்குவரத்தும் சிறிதுநேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# பிரித்தானிய ஆவண விருதுக்காக இலங்கையின் கொலைக்களம்

பிரித்தானியாவில் 2013 ஆம் ஆண்டுக்கான ஆவண விருதுகளுக்காக 8 ஆவணப்படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதில் இலங்கையின் கொலைக்களங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக 41 ஆவது பிரித்தானிய ஆவண விருதுக்குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

பிரித்தானிய ஆவண விருதுக்காக சனல் 4 கெல்லம் மக்ரேயின் இலங்கையின் கொலைக்களங்கள் "The killing fields Of Sri Lanka" பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சுமார் 12 தலைப்புக்களின் கீழ் இந்த ஆவணப்படங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இந் நிலையில் சனல் 4 வின் காஸ்மீர் டோச்சர் டெய்ல் (Kashmir's Torture Trail) என்ற ஆவணப்படமும் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர ஜோர்தான், சிரியா பிபிசியின் தெ சேம் ஒப் கத்தோலிக்க சேர்ச் (The Shame Of the Catholic Church) என்ற படமும் பரிந்துரைக்கு உட்பட்டுள்ளது. (அ-2)

# முதன்மை வேட்பாளரின் கூற்றால் ஆடிப்போயுள்ள பொதுபலசேனா

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரின் கருத்துக்கள் மிகவும் ஆபத்தானவை என பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தேசத்திற்கும் இனத்திற்கும் சவாலாக உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறு சங்க கட்டளை ஒன்றை வெளியிடுமாறு மாநாயக்க தேரர்களிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரின் கருத்துக்கள் மிகவும் ஆபத்தானவை.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நாட்டில் உள்ள அனைத்து பௌத்தர்களும் பௌத்த அமைப் புக்களும் எதிர்க்கின்றன. அனைத்து அமைப்புக்களும் மாநாயக்க தேரர்களும் இணைந்து கண்டியில் நடத்தும் அதிர்ஷ்டமான பூஜையின் போது, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு கோரி சங்க கட்டளை பிறப்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை விட மேலும் அதிகாரங்களை வடக்கு மாகாணத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுபவர் கூறியுள்ளார். இது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் மிகப் பெரிய சவால் எனவும் ஞானசார தேரர் கூறியுள்ளார். (அ-2)

# வேட்பாளர்களுக்கான தேர்வில் முன்னாள் போராளிகள் பங்கேற்கவில்லை

## விளக்குகிறார் அமைச்சர் சுசில்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளிகள் நேர்முகத்தேர்வில் பங்கு கொள்ளாத காரணத்தால் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடியவில்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சருமான சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியான ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதனையடுத்து யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் திடீரென அவர்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் என்ன என வினவிய போது பதிலளித்த அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு முன்னாள் போராளிகள் சிலர் விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால் வேட்பாளர்களுக்கான நேர்முகத் தேர்வில் அவர்கள் எவரும் பங்கு கொள்ளவில்லை எனப் பதிலளித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளரான தயாமாஸ்டர் போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டிருந்ததோடு கொழும்பில் இடம்பெற்ற நேர்முகத் தேர்விலும் பங்கு கொண்டார் எனத் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசன வரிசையிலும் தயாமாஸ்டர் அமர்ந்திருந்தார்.

மேலும் அவர் இதுவரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகளின் விடுதலைக்காகவே தாம் தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவதாகவும் தயாமாஸ்டர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் மாணவர்களிடம் சமூக திறன்களை வழங்க தவறிவிட்டனவா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

✦ அறிமுகம்

எல்லாச் சமூகங்களிலும் இன்று வளர்ந்தவர்கள்மேற்கொண்டுவரும்பல்வேறு சமுதாய மட்டத்திலான பங்களிப்புகளை நாளை தற்போதைய சிறுவர்கள் மேற்கொள்ள வேண்டும். இதுவே சமுதாய ஒழுங்குமுறை;- சமூக நீடிப்புக்கான வழிமுறையும் இதுவேயாகும்.

இத்தகைய எதிர்கால சமுதாயப் பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு ஏற்றதாக அவர்களைத் தயார்படுத்த வேண்டிய கடமைப் பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு.

இத்தகைய பொறுப்புடையவர்களாக மாணவர்கள் வளர்க்கப்பட வேண்டுமானால் பாடசாலைகள்ில் வழங்கப்படும் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஆசிரியர்களின் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் நீண்டகால நல்வாழ்வை உறுதிப்படுத்தவும் ஒழுக்கமும் தன்னம்பிக்கையும் சுய கட்டுப்பாடும் மாணவர்களிடம் மேலோங்கவும் ஆசிரியர்களுக்கு சில வகை அதிகாரங்களை சமூகம் வெளிப்படையாக வழங்க வேண்டும். ஆசிரியர்களிடமுள்ள எல்லா அதிகாரங்களையும் பறித்துவிட்டு அவர்கள் தங்கள் பிள்ளைகளை பொறுப்புமிக்க மனிதர்களாக வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை சமூகத்திற்கு ஒருபோதும் இல்லை.

பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்வதற்கு இன்று பல அதிகாரிகள் பல நிலைகளில் வளர்ந்து விட்டனர். நன்கொடை வழங்குபவர்கள், அரசியல் செல்வாக்கு மிக்க சிற்றூழியர்கள், கல்வித் தொழில் நுட்பக் கருவிகளை விற்கும் நிறுவனங்கள் என்றவாறு இத்தகையோர் பட்டியல் அண்மைக் காலங்களில் நீண்டு செல்கின்றன.

எனினும் சமுதாயம் பற்றிய உண்மை அக்கறை கொண்ட பெற்றோரும் சமுதாயத் தலைவர்களும் பாடசாலைகள் இளம் தலைமுறையினருக்கு எதையெதையெல்லாம் வழங்க வேண்டும் என்பதில் தெளிவாகவேயுள்ளனர்.

இத்தகைய பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கடமைகள் தொடர்பான சமுதாய எதிபார்க்கைகள் பற்றி இன்று கலந்துரையாடுவோம்.

✦ பல்துறைதிறன் கொண்ட பிள்ளைகள் வேண்டும்

குடும்பங்களிலிருந்து பாடசாலைகளுக்கு நகருகின்ற பிள்ளைகள் தமது வாழ்நாள் நேரங்களில் கணிசமான அளவை பாடசாலைகளிலேயே செலவு செய்கின்றனர். எல்லா பாடசாலை நாட்களும் பாடசாலைக்கு ஒழுங்காக செல்கின்ற பிள்ளைகள் பதின்மூன்று வருட கல்வியையும் பெறுகின்ற நிலையில் வாழ்நாள் முழுவதும் 15,600 மணித்தியாலங்களைச் செலவிடுகின்றனர். இதை பின்வருமாறு குறிப்பிடலாம்.

வருடம் ஒன்றுக்கு 200 நாட்கள் X 6 மணித்தியாலங்கள் = 1200 மனித மணித்தியாலங்கள்

பதின்மூன்று வருடங்களுக்கும் செலவிடும் நேரம் 1200 X 13 =15,600 மணித்தியாலங்கள்

மனித நாட்களாயின் = 1950 நாட்கள்

பிள்ளைகளின் வாழ்க்கையில் கணிசமான நாட்களைச் செலவிட்டு எதைக் கற்க வேண்டும்?

பிள்ளைகளிடம் கற்றல், வேலை செய்தல், தமது ஆற்றலை முழுமையாக வளர்த்தல் தொடர்பான எல்லா ஆற்றல்களும் வளர்க்கப்பட வேண்டும்.

பின்வரும் தகுதிகளுடன் பிள்ளைகள் வளர்வதற்கு பாடசாலைகள் பாடுபட வேண்டும்.

(I) திறமையாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்

(II) தமது உடல் நலன், பாதுகாப்பு பற்றிய அக்கறை

(III) எவ்வாறு கற்பது, பலருடன் சேர்ந்து எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பான தெளிவு

(IV) வேறுபட்ட பண்பாடு, வேறுபட்ட வாழ்வு முறைப் பின்னணிகளிலிருந்து வருபவர்களை புரிந்து கொள்வதும் உறவுகளைப் பேணுவதும்

(V) பழகுகின்ற நபர்களில் அக்கறை காட்டுவதும் அவர்களுக்கு உரிய மரியாதையை உண்மையாகவே வழங்குதலும்

(VI) தாம் வாழும் சமூகம் எவ்வாறு இயங்குகின்றது என்பதை புரிந்து கொள்ளுதலும் அதில் தமது வகிபங்கு என்னவென்பதை விளங்கிக் கொண்டு அதன்படி செயற்படுதலும்

(VII) நல்ல குணவியல்புகளை வளர்த்துக் கொள்ளுதலும் ஒழுக்கம் நிறைந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதலும்

இத்தகைய ஆற்றல்களை வழங்கும் கல்வி நடைமுறைகள் பற்றி புராதன பண்பாடுகளிலும் இலக்கியங்களிலும் இதமான முறையில் கதைச் சம்பவங்கள் மூலமாக தெளிவாக விளக்கப்பட்டுள்ளன என்பதையும் மறந்து விடலாகாது.

தற்போதைய நவீன கல்வி முறைகளில் இவற்றுக்கு பல புதிய பெயர்கள் வழங்கப் பட்டுள்ளன. அவை,

✦ குணவியல்புக் கல்வி Character Education

✦ சேவைகளைக் கற்றல் Service Learning

✦ குடிமக்கள் கல்வி Citizenship Education

✦ மனவெழுச்சி மதிநுட்பம்(Emotional Intelligence)

இவையெல்லாவற்றையும் ஒன்றிணைத்து பொதுமையாக சமூக- மனவெழுச்சி கற்றல்(Social-Emotional Learning - SEL) என்றழைக்கப்படுகின்றது.



கல்வித் தரிசனம்

ஆசிரியர்களும் பிற புலமையாளர்களும் மாத்திரம் கற்பிப்ப தால் இவைவருவதில்லை. பிள்ளைகளின் அனைத்துதேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளிடம் பல்வேறு புதிய பழக்கங் கள், நம்பிக்கைகள், எதிர்பார்க்கைகள், விருப்பங்கள், நடத்தைகள் வலுவுடன் வளர்க்கப்பட வேண்டும்

✦ புதிய இளைஞர்கள்

யாழ்ப்பாணத்து பாடசாலை மாணவர்களில் மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஒரு கருத்து நிலைத்தள மாற்றங்கள் தற்போது ஏற்பட்டு வருகின்றன. அவை,

✦ பெற்றோர் நம்புகின்ற விடயங்களில் சந்தேகம் அல்லது அவநம்பிக்கை வளர்தல்

✦ ஆசிரியர்கள் தமக்கு தேவையான எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளும் ஆற்றலும் மனப்பான்மையும் கொண்டவர்கள் என்பதில் சந்தேகம் கொள்ளுதல்

✦ தொழில்நுட்ப கருவிகளைப் பயன் படுத்துதல், போக்குவரத்து உதவிகள், மின்னியல் தொடர்பாடல் போன்றவற்றுக்கு பெற்றோர் தம்மீது தானே தங்கியுள்ளனர் என்று உணர்தல், இதனால் தாம் பெற்றோருக்கு கீழ்ப்படிவது அவசியம்தானா என்று சந்தேகித்தல்

✦ மது அருந்துகின்ற வெளிநாட்டில் வதியும் தமது பிள்ளைகள் மற்றும் உறவினர் களை மரியாதையுடன் வரவேற்கும் நிலையில் பெற்றோர் இருப்பதால் தாம் மது அருந்துவது தம்மை நவீன மனிதனாக்கி விடும் என நம்புதல்

✦ தமக்கு உழைப்பு ஏதும் இல்லாவிடினும் மாணவப்பருவத்தில் உள்ள போதிலும் தொலைபேசி, மோட்டார் சைக்கிளுக்கான எரிபொருள், இணையவழி தொடர்பாடல் போன்றவற்றுக்கு பெற்றோர் பணம் தருவது அவசியம் என்று வலுவாக நம்புதல்.

✦ அதிக தியாகங்களுடன் கடினமாக படித்து நல்ல உயர்கல்வி பெற வேண்டும் என்பதை விடவும் பெற்றோரின் பணத்தில் தனியார் துறையில் பட்டம் பெறுவதில் என்ன தவறு உள்ளது என்று நம்புதல்

✦ தொலைக்காட்சி மாதிரிகளில் அடிதடி நாகரிகங்கள் தமது ஆளுமை வெளிப்பாடுகளில் ஒன்றுதான் என்று கருதிக் கொண்டு வன்முறைகளில் குழுவாக ஈடுபடுதல்

இத்தகைய வளர்ச்சிப் போக்குகள் மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினர் தொடர்பாக நிகழ்ந்து வரும் பின்வரும் மாறுதல்களை வெளிப்படுத்துகின்றன. புதிய இளந் தலைமுறையினரின் பார்வையில்:

(I)தொன்மையை விட நவீனமயமாதல் சிறந்தது

(II) ஆசிரியர்கள் பரீட்சை வினா விடைகளை சம்பளத்திற்காக சொல்லிக் கொடுக்கும் அறிவுக் கூலியாட்கள். அவர்களிடமிருந்து எந்த விழுமியங்களையும் கற்க முடியாது; கற்க வேண்டியதுமில்லை.

(III) பெற்றோர்தான் தம்மிடம் தங்கியுள்ளனர் என்பதால் எல்லாவற்றையும் பெற்றோருக்கு சொல்ல வேண்டியதுமில்லை எல்லாவற்றையும் அவர்களிடம் கேட்க வேண்டியதுமில்லை.

(IV) செல்வந்தர்கள், மரியாதைக்குரியவர்கள் கூட மது அருந்துவதை ஊடகங்கள் காட்டுகின்றன. அது ஒரு நுகர்ச்சிப் பொருள் மாத்திரமே. அதை ஏன் ஒரு பண்பாட்டு சிதைவாக நோக்க வேண்டும்?

(V)தற்போது இளமை, விருப்பம், துடிப்பு, நுகர்ச்சி நாட்டம் உள்ள போதுள்ள மாணவ வாழ்க்கை மாதிரிகள் தொழில்நுட்பத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஏன் அவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்?

(VI) பல்கலைக்கழக பட்டங்களை விட தொழில்நுட்ப டிப்ளோமாக்கள் அதிக தொழில் வாய்ப்புக்களைதருகின்றன.அதில்கற்கலாம்தானே! ஏன் துன்பப்பட்டு படிக்க வேண்டும்? சகோதரிகளுக்கு சீதனம் தருவதுபோல் தமக்கும் உயர்கல்விக்கு பெற்றோர் பணம் செலவிடுவதில் என்ன தவறுள்ளது? என்று கருதுதல்.

(VII)எல்லாத் திரைப்படங்களும் தொலைக் காட்சிப் படங்களும் ஆற்றலின் வெளிப்பாடாகத்தானே அடிதடி நாகரிகங்களை காட்டுகின்றன. அவை தவறெனில் ஏன் சமூக நிறுவனங்களும் அரசாங்கமும் தொடர்ந்து அவற்றை அனுமதித்து வருகின்றனர்.

இப்போதுள்ள புதிய சிந்தனைகளும் உணர்வுகளும் செம்மையான நெறிமுறை நோக்கி மாற்றப்பட வேண்டும். இதற்கு சமூக- மனவெழுச்சிக் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

✦ சமூக- மனவெழுச்சித்திறன்களை வளர்த்தல்

பிள்ளைகள் எதிர்காலத்தில் சமூகத்துக்குரிய பிரச்சினைகளாகவும் சவால்களாகவும் கவலை தருபவர்களாகவும் இருத்தல் கூடாது. இது நியாயபூர்வமான விருப்பம் தான்.

தற்போதுள்ள பாடசாலை முறையிலும் ரியூசன் வலையமைப்பு தளத்திலும் அதிகாரங்களே இல்லாமல் பொறுப்புக்கள் மாத்திரம் திணிக்கப்பட்ட ஆசிரியர்களும் பிள்ளைகளை இயன்றளவு வீட்டுக்கு வெளியே உலாவ விடுவதற்கு பணம் செலவிடுவதை வசதியெனக் கருதும் பெற்றோர்களும் உள்ள நிலைமைகள் பிள்ளைகளை செம்மையானவர் களாக மாற்ற உதவாது.பாடசாலைகளும் கோவில்களும் சனசமூக நிலையங்களும் மாதர் மன்றங்களும் இளைஞர்களினால் உருவாக்கப்படுகின்ற புதிய சவால்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் துன்பங்கள்பற்றி கவனம் செலுத்த வேண்டும்.




பேராசிரியர் மா.சின்னத்தம்பி

பள்ளி மாணவர்கள் மற்றும் இளை ஞர்கள் மீது சற்று மாறுபட்ட சமூக அணுகுமுறையை (Social approach) வடிவமைக்க வேண்டிய தருணம் வந்து விட்டது. அவ்வாறு கவனிக்க வேண்டியன,

✦ மாணவர்களதும் இளைஞர்களதும் சமூக மட்டத்திலான பொறுப்பு, கடமை, இடம், மதிப்பு என்பன பற்றி தெளிவுபடுத்தப்படல் வேண்டும். இவற்றை சிறப்பாக செய்வதற்கான கல்வியும் பயிற்சியும் வாய்ப்பும் சுதந்திரமும் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக பரந்துபட்ட சமூக அக்கறை வளர வேண்டும்.

✦மாணவர்களும் இளைஞர்களும் தமது வாழ்வு மற்றும் வாழ்வுசார் பணி இலக் குகள் (Life Tasts) பற்றிய விழிப்புணர்வை பெற சமூகம் துணை செய்ய வேண்டும். பாடசாலைகளுக்குள்ளேயும் பாடசாலைக்கு வெளியேயும் உள்ளவர்களுக்கு இதனை எவ்வாறு வழங்குவது? யார் மூலம் வழங் குவது? மகிழ்வுடன் அவர்கள் இவற்றை அறிந்துகொள்ள உதவும் வழிமுறையென்ன? என்றெல்லாம் பாடசாலைகளினதும் சமூக நிறுவனங்களினதும் தலைவர்களும் பெற்றோரும் இளைஞர்களுடன் கலந்துரையாட வேண்டும்.

✦திறன்களும்சுதந்திரமும்சுயகட்டுப்பாடும்

பாடசாலைகள் தமது அணுகுமுறை களை சுற்றுநிருபங்களை மையப்படுத்தியும் பரீட்சை பெறுபேறுகளையும் மனதிற்கொண்டும் ஒரே மாதிரி அணுகுமுறைகளை தொடர்ந்து கையாள்கின்றன. ஆனால், பிள்ளைகளில் அறிவுத்தரம், சுதந்திர வேட்கை, தற்துணிவு, தொடர்பாடல் வீச்சு, தொழில்நுட்ப ஆற்றல், புதிய சிந்தனை என்பன தொடர்பாக சடுதியாக பல மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

பாடசாலைகளும் பெற்றோரும் சமூக தலைவர்களும் கல்வி மற்றும் கற்பித்தல் தொடர்பாக பின்வரும் திசைகளில் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது.


(I) அறிவு மற்றும் மனனம் செய்தல் என்பதற்கு பதிலாக திறனும் புரிந்து கொள்ளு தலும் பிரயோகித்தலும் சுயமாக மதிப்பிடு தலும் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டும்.

(II) கட்டுப்பாடு, மேலாதிக்கம், திணித்தல் என்பவற்றுக்கு பதிலாக சுயமான குழு உரு வாக்கம், கருத்து வெளிப்பாட்டுக்கான வாய் ப்பு, தமது புதிய எண்ணங்களை வெளியிட ஊக்குவித்தல் போன்றவற்றுக்கு முன்னு ரிமை வழங்க வேண்டும்.

(III) வகுப்பறைகளில் நிரல் மற்றும் வரிசை முறையை மாற்றி செயற்படும் குழுக்களாக்கி வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம், கருத்து, விவாதித்தல் என்பவற்றுக்கும் வாய்ப்பு உருவாக்கப்படல் வேண்டும். இவை பற்றி சிந்திப்போமா? வழமையான கற்றலுக்கு புறம்பாக இத்தகைய வழிமுறைகளிலும் எமது கவனத்தை திருப்புவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா சென்றடைந்த



அமரர் ஐயாத்துரை இரத்தினசாமி

# 'அன்னபூரணி' பவளவிழா காண்கின்றது

செவ்வி கண்டவர் : நடராஜா சிவரெத்தினம் (வல்வை ஜெயம்)

வல்வையரால் கட்டப்பட்டு அமெரிக்க தனவந்தரால் வாங்கப்பட்டு வல்வை கடலோடிகளால் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட இரட்டைப்பாய்மரக் கப்பல் 01.08.1938இல் அமெரிக்கா சென்றடை ந்தது.

ஈழத்தமிழரின் ஆளுமையை குறிப் பாக வல்வெட்டித்துறை மக்களின் சாதனைகளை உலகுக்கு பறைசாற்றிய இச்சாதனை நிகழ்வை (வைரவிழாவை) புலம்பெயர் வாழ் வல்வை மக்கள் தத்தமது நாடுகளில் நினைவுகூர்ந்து விழா எடுக்கிறார்கள்.

இதை நாமும் இலங்கைவாழ் மக்களு க்கு பெருமையுடன் தெரியப்படுத்த வேண்டு மெனும நோக்கில் என்னால் 1995இல் அன்னபூரணிக் கப்பலில் அமெரிக்கா சென்றவர்களுள் கடைசியாக வாழ்ந்து அமரரா கிய ஐயாத்துரை இரத்தினசாமி யுடன் நான் கண்ட நேர்முகத்திலிருந்து சில பகுதிகள் கேள்வி பதில் வடிவில் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

**கே: நீங்கள் ஏதாவது சாதனை படைக்க வேண்டும் என நினைக்கவில்லையா?**

ப : ஏன் இல்லை! கப்பலில் இந்த உலகத்தை சுற்றி வர வேண்டும் என்ற ஆசை. ஆனால் அது நிறைவேறுமா என்ற சந்தேகமும் கூடவே இருந்தது. 1936இல் ஜேர்மனியர் ஒருவர் கடற் பிரயாணம் செய்து திருகோணமலையை அடைந்து தனகது உதவியாக தனது வள்ளத்தில் என்னையும் கூட்டிச்செல்ல இருந்தார். நான் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தேன். ஆனால அது பகற்கனவாகிவிட்டது. எனது உறவினர்களின் கடுமையான எதிர்ப்பினால் அது கைகூடாது போய்விட்டது.

**கே: நீங்கள் எப்படி அன்னபூரணியை அமெரிக்காவுக்கு கொண்டுபோக நேர்ந்தது?**

ப: இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமானால் வல்வெட்டித்துறையினரது கப்பல் கட்டும் தொழிலையும் அவர்களது கடல்கடந்த வணிகத்தையும் பற்றி சிறிது கூறியாக வேண்டும். எமக்கு தெரிய அதாவது கர்ணபரம்பரையாக ஏறக் குறைய 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளிலிருந்து நாம் இத்தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கிறோம். உலகத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித்துறை மக்கள் வல்லுநர்களாக திகழ்ந்தமைக்கு பல சான்றுகள் உள்ளன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் எம்மவர் பல கப்பல்களை வைத்து தொழில் நடத்தி வந்தனர். இவர்கள் அதிராம் பட்டினம் நாகபட்டினம், காக்கிநாடா, கல்கத்தா, சிட்டகொங், ரங்கூன், பினாங்கு, பாகிஸ் தான், மலேசியா, சிங்கப்பூர், நிக்கோபார், யாவா, சுமத்திரா போன்ற இடங்களுக்கு சென்று 3ஆயிரம் மூடை முதல் 11ஆயிரம் மூடை வரை சரக்குகள் ஏற்றக கூடிய கப்பல்களில் வியாபாரத்தில் சுதந்திரமாக ஈடுபட்டு வந்தனர்.

இக்காலகட்டத்தில் எமக்குச் சொந்தமானதும் இந்திய செட்டிமாருக்கு சொந்தமானதுமாக இருந்த 113 கப்பல்களின் பெயர்கள் 1982இல் பூ.க.முத்துக்குமாரசாமி மற்றும் செ.வைத்திலிங்கம் பிள்ளை என்னும் ஊர் பற்றாளர்களால் எழுதப்பட்ட "வல்வெட்டித்துறை ஊரின்னிசை" எனும் நூலில் காணப்படுகிறது. கப்பல் கட்டும் தொழிலில் ஒவ்வொரு நுணுக்கங்களையும் எம்மவர் அறிந்திருந்தனர் என்பதற்கு ஒரு சான்று வருமாறு:

1850ஆம் ஆண்டளவில் இங்கிலாந்திலிருந்து வந்த "KING OF ATLANTIC" என்னும் "ஸ்கெச்ரக" பாரிய கப்பல் திருகோணமலையில் கடலில் அமிழ்ந்த போது, அதை எடுக்க முடியாமல் அந்தக் கப்பலை அந்த நிலையிலேயே விற்றுவிட நேர்ந்தது. இது 12ஆயிரம் தொன் எடையுள்ளது. இதை அறிந்த வல்வைப் பெரியவராகிய திருமேனியர் வெங்கடாசலம்பிள்ளை என்பவர் கடலில் மூழ்கிய நிலையிலேயே இக்கப்பலை ஏலத்தில் வாங்கி, மீட்டெடுத்து மிதக்கச் செய்து வலவைக்கு கொண்டு வந்து பழுதுபார்த்து அதனை சில வருடங்களாக கடல்கடந்த வியாபாரத்திலும் பயன்படுத்தினார்.

இதன் மூலம் பொருளீட்டி வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் ஆலயத்தை (சிவன் கோவிலை) கட்டுவித்தார். எம்து ஊரில் கட்டப்பட்ட கப்பல்கள் உலக ஸ்தாபனமாகிய லொயிட்ஸ் இல் பதிவு செய்யப்பட்டவையாகவே இருந்தன.

**கே: அன்னபூரணி எத்தனையாம் ஆண்டு யாரால் கட்டப்பட்டது? அதன் விபரங்களைக் கூறுவீர்களா?**

ப: வல்வையிலுள்ள ஆதிகோவிலடிக் கிராமத்தின் கிழக்குப் புறத்தில் உள்ள ஒரு கப்பல் கட்டுத்தளத்தில் (வாடியில்) கட்டப்பட்டது. இந்த இடம் இன்றும் வாடியடி என அழைக்கப்படுகின்றது. இதன் கடலோரத்தில் அன்றைய கப்பல்களின் வீரக்காவியம் கூறும் சின்னங்களாக பல தொன்கள் எடையுள்ள இரு நங்கூரங்களை இன்றும் காணலாம். இந்நங்கூரங்களைக் கொண்டே அப்போது கட்டப்பட்ட கப்பல்களின் பருமனை ஊகிக்கக்கூடியதாக இருக்கும். இக்கப்பல் உள்ளூர் வேப்பமரம் கொண்டு எமது ஊரைச் சேர்ந்த சுந்தரி மேத்தியாரால் கட்டப்பட்டது. இவர் பொன்னி மேத்திரியின் தந்தை. இந்த இரட்டைப் பாய்மரக் கப்பல் 1930இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இதன் நீளம் 89 அடிகளாகும்.

**கே: அந்தச்சிறிய கப்பலில் பல்லாயிரக கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள அமெரிக்காவிற்கு அதுவும் முன்பின் அனுபவமில்லாத பயங்கரக் கடலகளை கடந்து செல்லத் துணிந்தது ஒரு கண் மூடித்தனமான செயலல்லவா?**

ப: அக்கப்பலை வாங்கிய றொபின்சன் அதனை உவாக்கர் (Walkers) கம்பனி மூலம் ஒரு ஆங்கிலக் குடும்பம் வசிக்கக் கூடிய வகையில் குளியலறை, சாப்பாட்டறை போன்றன கொண்டதாக ஒரு நவீன கப்பல் போல சிறு மாறுதல்களை செய்வித்துக் கொண்டார். அத்துடன் காற்றில் பாய்விரித்து பயணம் செய்ய முடியாத சந்தர்ப்பங்களிலும் ஆபத்து நேரங்களிலும் உதவக்கூடியதாக "என்ஜின்" உம் பூட்டப்பட்டது.

**கே: அக் கப்பலில் படகோட்டிகளாக வந்தவர்களின் விபரங்களைக் கூறமுடியுமா?**

ப: இந்தக் கப்பலை அமெரிக்காவுக்கு பாய்கள் [illegible] வர்களாக [illegible] அவர் சேர்த்துக் கொண்டார். கப்பலின் பெயரும் "Brigantine Florence C. Robinson" என மாற்றப்பட்டு பதிவு செய்யபபட்டது. அத்துடன் ஏடன் (Adon) வரை செல்லக் கூடிய வேறு இரண்டு மாலுமிக ளையும் றொபின்சன் (Robinson) நியமித்துக் கொண்டார்.

**கே. உங்கள் பயணம் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிக்கப்பட்டது. என பது பற்றியும் உங்கள் அனுபவங்கள் பற்றியும் சுருங்கக் கூறுங்கள்?**

ப: அந்த உன்னதமான பயணமானது எனது குறிப்பின்படி 3- 3 -1937இல் ஆரம பமானது. இதன் அனுபவங்களை ஒவ்வொன்றாக சொன்னால் ஒரு பெரிய புத்தகமே எழுதிவிடலாம். எனவே மிக சுருக்கமாகச் சொல்கின்றேன்.

கொழும்பை விட்டுப் புறப்பட்ட எமக்கு முதன் முதலில் கடக்கும் துறைமுகமாக அமைந்தது மாலைதீவு ஆகும். எம்முடன் கூடவே செல்வப்பிரபு றொபின்சனும் இருந்தார். அவர் சிறிது கொச்சையான தமிழ் கதைப்பதுடன் எமது உணவுகளையும் உண்ணப் பழகி இருந்தார்.

ஏடன் துறைமுகத்திற்கு வந்தடைந்த நாம் நன்றாக ஓய்வு எடுத்தோம். ஆனால் எம்மவரில் பலருக்கு எமது மண்ணை ஒரு முறை போய்பார்த்துவரும் மண் வாசனை பிடித்துவிட்டது. பல நாட்கள் ஏடன துறை முகப்பகுதியை சுற்றிப் பார்த்தபின் என்னையும் சபாரத்தினம் மற்றும் சிதம்பரப்பிள்ளை என்போரையும் கப்பலை பார்த்துக்கொள்ளும் பொறுப்பை ஏற்கும்படி கூறி ஏனையோர் ஒரு பிரான்ஸ் நாட்டு உல்லாசப்பயணக்கப்பல் மூலம் றொபின்சன் அவர்களால் கடலோட்டிய திறமைக்காக நிறைய சன்மானங்கள் வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் பின்னர் றொபின்சனும் தனது மனைவியைக காண அமெரிக்கா போய்விட்டார். நாம் கரைக்குப் போய் அந்த வறட்சியான துறை முகப்பகுதியை எமது சிறிய படகில் சுற்றிப் பார்ப்பதும் நிறையப் பேரீச்சம்பழம் வாங்கிச்சாப்பிடுவதுமாக பொழுதைக்கழித்து வந்தோம். அங்கு சோமாலியர்கள் வாழ்ந்து வந்தனர். பலதேசத்தவரும் அங்குவந்து போயினர். நாம் இருவர் கரைக்கு போகும் போது ஒருவர் கப்பலில் காவலுக்கு இருப்பார். இப்படியாக 6 மாதங்கள் கடந்தபின் தம்பிப்பிள்ளை தண்டயலுடன் தில்லையமபலமும் சுப்பிரமணியமும் மட்டும் வந்தார்கள். இதேநேரம் றொபின்சன் பிரபு தனது அன்பு மனைவியை அழைத்துக் கொண்டுவந்து சேர்ந்தார். மீண்டும் பயணத்திற்கு ஆயத்தமானோம்.

**கே: சுயஸ்கால்வாயைக்கடக்க எவ்வளவு காலம் சென்றது?**

ப: சுயஸ்கால்வாயின் நீளம் 120 மைல்கள் [illegible] கடக்கும் போது பலசிரமங்கள் [illegible]. ஒரே நேரத்தில் ஒரு பெரிய கப்பல் மட்டுமே இதனூடாக போககுவரத் துச் செய்யமுடியும். எதிர்த்திசையில் வரும் கப்பல் விலகிச் செல்வதற்காக "ப" வடிவில் இடையிடையே வெட்டப்பட்டிருக்கும் பகுதிக்குள் கப்பல் செலுத்தப்பட்டு மீண்டும் பிரதான கால்வாய்க்கு கொண்டு வரப்படும். இப்பகுதியில் அங்குள்ள ஒரு கப்பல் தலைவர் எம்முடன் கூடவே இருந்து வழி நடத்தினார்.

இப்போது இது நவீனமயமாக்கப்பட்டு ஒரே நேரத்தில் பல கப்பல்கள் போக்குவரத்து செய்யக்கூடியதாக உள்ளது. அத்துடன் இதனை கடக்க 12 மணி நேரம் போதுமானது. நாம் சென்ற போது இருமருங்கிலுமுள்ள அரும்பெரும் காட்சிகளை ரசித்த வண்ணம் சென்றோம். சுயஸ்கால்வாயின் நடுப்பகுதியில் இஸ்மாலியா இருக்கிறது. உலகப் பிரசித்தி பெற்ற நைல்நதியின் கரையோரத்தில் எகிப்தின் துறைமுகமாக இது உள்ளது. றொபின்சன் எங்களை மகிழ்விககும் பொருட்டு அங்கிருந்து 100 மைல்கள தூரத்தில் உள்ள எகிப்தின் தலைநகர் கெயரோவுக்கு அனுப்பி வைத்தார். அங்கு தங்குவதற்கு ஹோட்டல் வசதிகளையும் சுற்றிப பார்ப்பதற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். நாம் பல இடங்களைப் பார்த்து பார்த்து மகிழ்ந்தோம் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இருந்தது. நைல்நதிக்கரையில் நாம் திரிந்து உருணடு புரண்டு அதன் அழகை ரசித்தமையே! உலகில் இவ்வளவு அழகான காட்சிகளை ஆண்டவன் படைத்திருக்கின்றானே என பிரமிப்படைந்தேன். இதுபற்றி சொல்ல நான் ஒரு கவிஞனாக இல்லையே! அத்துடன் அப்போது எகிப்தை ஆண்ட மன்னர் பாருக்கின் திருமணத்தை நாம் நேரில பார்க்கும் அரிய சந்தர்ப்பமும் எமக்கு கிடைத்தது.

இதன்பின்னர் (GIBRALTOR) ஜிபிரோலரர் ஊடாக அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்தே அமெரிக்காவுக்கு செல்ல வேண்டியிருந்தது. இப்பெருங்கடலை பாய்மரக்கப்பலில் கடப்பது மிகமிக கடினமான காரியம் என்று எமக்கு தெரியும். ஆனாலும் நாம் முன் வைத்த காலைப் பின்வைக்காது துணிவுடன் தொடர்ந்தோம்.

ஜிபிறோல்ரர் துறைமுகத்தில் றொபின்சனின் அனுமதியுடன் அமெரிக்க தூதரக வேண்டுகோளின்படி ஒரு அமெரிக்க கைதியை எமது கப்பலில் ஏற்றிக்கொண்டோம். பயணம் தொடர்ந்தபோது பயங்கரமான ஸ்பெயின் கடற்படைக் கப்பலொன்று எமது கப்பலை நோக்கி பயங்கர ஓசையுடன் தாக்கத் தொடங்கியது. ஆனால், நாம் எமது நிலையை தெரிவிக்கும் வணணம் பாய்கள் அனைத்தையும் இறக்கி வெள்ளைக்கொடியை அசைத்தோம். பின்னர் எமக்கு அண்மையில் அவர்கள் வந்த போது நாம் எமது பயணத்தின் நோக்கத்தை அவர்களிடம் கூறி எம்மிடம் ஆயுதங்கள் எதுவும் இல்லை என ஆங்கிலத்தில் கூறி அந்த பேராபத்திலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினோம்.

இவ்வாறாக தொடர்ந்து நாம் பயணம செய்து இறுதியில் அமெரிக்காவின் வட கோடியிலுள்ள மசாசுசெட்டில் (MASSASUETTS -STATE) மாகாணத்தில் அமைந்துள்ள குளோசெஸ்ரர் (GLOU CESTER) எனும் துறைமுகப்பட்டினத்திற்கு 01 - 8 - 1938 இல் அதாவது ஏறக்குறைய ஒன்றரை வருடங்களின் பின் சென்றடைந்தோம். பல பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எம்மைச்சூழ்ந்துகொண்டு பெரும் வரவேற்பளித்தனர். வேட்டி கட்டி அரை நிர்வாணமாக இருந்த எம்மையும் தம்பிப்பிள்ளை தண்டையலையும் துருவித் துருவி பல கேள்விகள் கேட்டனர். அங்கு பத்திரிகைகள் "உத்தியோகப்பற்றற்ற தூதுவர்களாக" தமிழர்கள் இலங்கையிலிருந்து வந்திருப்பதாக தலைப்புச் செய்திகளும், கட்டுரைகளும் வெளியிட்டன. வல்வெட்டித்துறைக் கடலோடிகள் பற்றியும் அவர்கள் கப்பல் கட்டும் திறன் பற்றியும் பல செய்திகள் அமெரிக்கப் பத்திரிகைகளிலும் இலங்கைப் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின.

நாம் அமெரிக்காவின் பல இடங்களையும் சுற்றிப் பார்ப்பதற்கு றொபின்சனும் மனைவியும் ஏற்பாடு செய்து தந்தனர்.

சிலகாலம் அங்கு தங்கி இவற்றையெல்லாம் அனுபவித்தபின்னர் நாம் நீராவிக் கப்பல் மூலம் சிங்கப்பூரின் வழியாக வல்வெட்டித்துறையை வந்தடைந்தோம்.

✔ ✔ ✔


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

532

# வீராதி வீரன்



ஏராளமான மக்கள் ஒரு மாட்டு வண்டியின் அருகே நின்றிருந்தனர். வண்டி முழுவதும் பல பாத்திரங்களில் சாப்பாடு நிரம்பியிருந்தது. வண்டி ஓட்டுபவன் பேய் அறைந்தது போல் காணப்பட, அவனுடைய குடும்பத்தினர் "ஓ" என்று கதறிக்கொண்டிருந்தனர்.

அவர்களை அணுகி விவரம் கேட்டபோது, கிராமத்

அம்புலிமாமா கதைகள்

தின் ஒரு மூலையில் ஒரு ஒற்றைக் கொம்பு இராட்சசன் இருப்பதாவும், அவனுக்கு உணவு செல்கிறது என்றும் அறிந்தான். இராட்சசன் அந்தக் கிராமத்திற்கு வந்த புதிதில், கண்ணில் கண்டவர்களை எல்லாம் அடித்துக் கொன்று தின்று கொண்டிருந்தான். அவ்வாறு அவன் தொடர்ந்து செய்தால், கிராமத்திலுள்ள அனைவரும் சில நாட்களிலேயே கூண்டோடு கைலாசம் செல்ல வேண்டியதுதான் என்று நினைத்த கிராமவாசிகள், அனைவரும் ஒன்றுகூடி அந்த இராட்சசனை சந்தித்து நிலைமையை விளக்கினர்.

பின்னர், ஒவ்வொரு நாளும் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்து ஒரு நபர் சாப்பாட்டை மாட்டு வண்டியில் எடுத்துச் சென்று அவனை அடைய வேண்டுமென்றும், அவன் சாப்பாடு அனைத்தையும் சாப்பிட்ட பிறகு மாட்டையும், மனிதனையும் சேர்த்துச் சாப்பிடலாம் என்றும் உடன்பாடு செய்து கொண்டனர்.

அதன்படி அன்று முறைப்படி செல்ல வேண்டிய ஒரு ஆள் வண்டியுடன் தயாராக இருந்தான். வீரன் அவர்களிடம் சென்று, "உங்கள் வீட்டுக்காரருக்கு பதிலாக நான் இராட்ச்சனிடம் செல்கிறேன்" என்று கூற, அவர்கள் மகிழ்ச்சியில் கூத்தாடிக் கொண்டே வீரனை அனுப்பி வைத்தனர். வீரன் இராட்சசன் இருக்குமிடத்தை அடைந்ததும் பசியுடனிருந்த இராட்சசன் ஓடோடி வந்தான். ஆனால், புல் தடுக்கி பயில்வான் போல் இருந்த வீரனைக் கண்டதும் அவனுக்கு சிரிப்பு வந்து



விட்டது. அவன் சிரிப்பொலியைக் கேட்ட மாத்திரத்தில் வீரன் பயத்தில் மயங்கி விழுந்தான்.

மறுபடியும் வீரன் கண் விழித்தபோது, அவன் அருகில் ஒரு புதிய மனிதன் உட்கார்ந்திருந்தான். தான் உயிருடனிருப்பதை உணர்ந்ததும் அவனுக்குத் தன்னை இராட்சசன் எவ்வாறு கொல்லாமல் விட்டான் என்று ஆச்சரியம் ஏற்பட்டது. "இராட்சசன்... அவன் எங்கே?" என்று கேட்டவாறே வீரன் எழுந்தபோது, அந்தப் புதிய மனிதன், "பயப்படாதே தம்பி!" இராட்சசன் இனி வரமாட்டான். இதுவரை இராட்சசனாக இருந்தது நான்தான்! ஒரு முனிவருடைய சாபத்தினால் நான் இராட்சசனாக மாறினேன். ஒரு காலத்தில் எனக்கு இந்த முனிவர்களைக் கண்டால் பிடிக்காமல் இருந்தது.

அவர்களைக் கண்ட இடத்தில் எல்லாம் அவமதித்தேன். ஒரு முறை, சில முனிவர்கள் என் வீட்டுப்பக்கம் வந்து "அப்பா பசியாயிருக்கிறது! ஏதாவது சாப்பிடத்தருவாயா?" என்று கேட்டதும், அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து, மணிக்கணக்காக உட்கார வைத்து, பிறகு அவர்களுக்கு இலைபோட்டு அரிசியும், பச்சைக் காய்கறிகளும் பரிமாறி, "இதை உங்கள் தவ வலிமையால் வேக வைத்து உண்ணுங்கள்!" என்று கேலி செய்தேன்.

அவர்கள் கோபங்கொண்டு என்னை இராட்சசனாக மாறும்படி சாபமிட்டனர். பிறகு என் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டதும் "என்றாவது ஒருநாள் ஒரு மனிதனைப் பார்த்து மனம் விட்டு சிரித்தால், சாபம் நீங்கிவிடும்!" என்றனர்.

அன்று முதல், ஒற்றைக் கொம்பு இராட்சசனாக மாறிவிட்டேன். இதுவரை யாரையும் பார்த்து நான் சிரித்ததே இல்லை.

உன்னைக் கண்டதும் எனக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. எனக்கு சாபவிமோசனம் அளித்த உனக்கு என் மனமார்ந்த நன்றி!" என்றான்.

வீரன் அவனையும் அழைத்துக்கொண்டு கிராமத்திற்குத் திரும்பினான். உயிருடன் திரும்பி வந்த வீரனைப் பார்த்து அனைவரும் ஆச்சரியக் கடலில் மூழ்கினர்.


"அந்த இராட்சசனை பயமுறுத்தி ஓடச் செய்து விட்டேன்!" என்று வீரன் அவர்களிடம் சொல்ல, மனிதனாக மாறிய இராட்சசன், "ஆமாம்! வீரன் சொல்வது உண்மை! நான் பார்த்தேன்!" என்றான்.

கிராமத்தினர் அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டு "வீராதி வீரன் வாழ்க" என்று கூச்சலிட்டனர்.

பிறகு அவனுக்கு அனைவரும் பொன்னும், பொருளும் வழங்க, வீரன் அவற்றை எடுத்துக் கொண்டு தன் சொந்த கிராமத்திற்குத் திரும்பினான்.

அவனுடைய வீரசாகசச் செயல்கள் பற்றிய செய்தி அதற்குள் எல்லா கிராமங்களிலும் பரவிவிட்டதால், அவனுடைய சொந்த ஊர் மக்களும் அவனுக்குப் பிரமாத வரவேற்பு அளித்து அவனை வீராதி வீரன் என்று போற்றினர்.

தன் பாட்டியின் ஆத்மா அதைக் கேட்டு சாந்தி அடையும் என்று வீரன் நம்பினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போயுள்ளன

## அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**மாகாணசபை முறைமையை முற்றாக எதிர்க்கும் கட்சியென்ற வகையில் ஜாதிக ஹெல உறுமய மாகாணசபைத் தேர்தல்களை புறக்கணிக்கின்றது. மறுபுறம் விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மக்களை யாழ்.குடாநாடு உட்பட வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் மீள்குடியமர்த்தாது தேர்தலை முன்னெடுப்பதையிட்டு எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு அனைத்தும் சீர்குலைந்து அசாதாரணமான சூழல் தோன்றியுள்ளது. ஒவ்வொரு நாளும் தாக்குதல்கள், கொலைகள், குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இவற்றைத் தடுப்பதற்கு அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. நாட்டில் காட்டுத்தர்பார் நடைபெறுகிறது.

### நிதி நெருக்கடி

அரசாங்கத்தை பராமரிப்பதற்காக நாட்டிலுள்ள அரச வங்கிகளில் திறைசேரியின் செயலாளர் கடன் பெற்றதால் இன்று அரச வங்கிகளில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்து மூடப்பட்டு விட்டன. அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கியில் மேலதிக பற்றாக அரசாங்கம் கடன் பெற்றுள்ளது.

இதுமேலும் அதிகரிக்குமானால் அரச வங்கிகள் வீழ்ச்சியடையும். அரச ஊழியர்களின் சம்பளம் 20, 30 ஆம் திகதிகளில் வழங்கப்படும். அதற்கும் பணம் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

### சுற்றறிக்கை

நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. எனவே, அரசாங்கம் செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என திறைசேரியின் செயலாளர் சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் செலவுகளையும் வீண் விரயங்களையும் அரசாங்கம் குறைத்திருக்கலாம். ஆனால், அதனைவிடுத்து சுகாதார அமைச்சுக்கான நிதியைக் குறைத்துள்ளது. இதுபோன்று மக்களின் நலன்புரி சேவைகளுக்காக ஒதுக்கும் நிதிகளில் அரசாங்கம் கைவைத்துள்ளது.

### மாலைதீவு

நாடு இன்று பாரிய நிதி நெருக்கடியை சந்தித்துள்ளது. அரச வங்கிகளின் நிதி நிலையும் மோசமடைந்துள்ளது. இவ்வாறானதோர் சூழ்நிலையில் மாலைதீவு நாட்டின் ஜனாதிபதியின் வீட்டுக்குச் செல்லும் பாதையை செப்பனிடுவதற்கு எமது அரசாங்கம் 50 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளது.

அதேபோன்று உகண்டாவுக்கு 150 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இவ்வாறு மக்களின் பணத்தை அரசாங்கம் வீணாக்குவதால் நாடு பொருளாதார வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அரசாங்கமோ பெருமைக்காக வேறு நாடுகளுக்கு பணத்தை அன்பளிப்புச் செய்கின்றது.

இந்நிலை தொடருமானால் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் அரச வங்கிகளை மூட வேண்டிய நிலை உருவாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கை போர்க்குற்றவாளிகள் பிரித்தானியாவில் தஞ்சம்-பி.பி.சி.

(கொழும்பு)

போர்க்குற்றம் புரிந்துள்ளவர்கள் என்று கருதப்படும் பலர் இப்பொழுது பிரிட்டனில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தவர்களும் அடங்குகின்றார்கள் என பி.பி.சி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய 100 குற்றவாளிகள் இவ்வாறு உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பல வருட காலமாக பிரிட்டனில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், லிபியா, ருவாண்டா, சேர்பியா, இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று பி.பி.சி. கூறியது.

போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு பிரிட்டன் ஒரு அடைக்கலம் வழங்கும் நாடாக இருக்கப் போவதில்லையென உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ள அதேவேளை, கடந்த வருடம் பிரிட்டன் போர்க்குற்றவாளிகளை அடையாளம் கண்டு அறிவித்தது என்றும் பி.பி.சி. கூறியுள்ளது.

தகவல் அறியும் உரிமையின் கீழ் பி.பி.சி. விடுத்த கோரிக்கையின் பேரில் உள்நாட்டு அமைச்சு இந்தத் தகவலை வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இருந்து உள்நாட்டு அமைச்சு 800 நபர்களின் விடயங்களை 15 மாத காலமாக ஆராய்ந்து வந்துள்ளது.

இவர்கள் போர்க்குற்றம் புரிந்தவர்களாகவும் மனித இனத்துக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இவர்கள் பிரிட்டனில் குடியுரிமை கேட்டு அல்லது அடைக்கலம் வழங்குமாறு கேட்டு பிரிட்டனில் தங்கியிருக்கின்றனர்.

இவர்களில் 99 பேர் தொடர்பில் உள்நாட்டு அமைச்சு பாதகமான பரிந்துரைகளை வழங்கியுள்ளது. இவர்களில் மூவர் கடந்த வருடம் நாடு கடத்தப்பட்டார்கள். 20 பேருக்கு அடைக்கலம் மறுக்கப்பட்டது.

46 பேரின் குடியுரிமை கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. இதற்கு மேலாக 16 போர்க் குற்றவாளிகள் பிரிட்டனுக்குள் நுழைவதற்கு அனுமதி கேட்டும் விண்ணப்பித்துள்ளார்கள்.

இருந்தாலும் இவர்கள் பிரிட்டனிலேயே தங்கியிருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றனர். ஏனையவர்கள் பற்றிய விபரங்கள் தெரியவில்லை. 55 பேரில் போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைகள் தற்பொழுது நடைபெற்று வருவதாக லண்டன் மாநகர பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 9 பேரின் விடயங்கள் மட்டுமே தங்களிடம் தற்பொழுது ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர் என்று அச் செய்திச்சேவை அறிவித்துள்ளது. (அ-2)



சுன்னாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ முகாம் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் நடமாடும் சேவையொன்று அண்மையில் ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது....


மறுபிறப்பு உண்டென்றால் மடியினில் நீ தவழ்ந்திட வா..

சகாதேவன் நிலக்ஷன் (நிலா)



நிலாவெனவே ஒளிவீசி நித்திலத்தில் மிளிர்ந்தவனே!
நீர்க் குமிழியல்ல, நிலையான புகழோடு
நிகரின்றி வாழ்ந்தவனே!
ஒன்றல்ல இரண்டல்ல ஒப்பற்ற பல்துறை வித்தகனாய்
பாரினிலே பவனி வந்தவனே!
நின் திறனை பொறுக்காத பொல்லாதோர்
தேடிவந்து உனை எழுப்பி ஓராயிரம் கேள்வி கேட்டு
ஒப்பற்ற உன் திறனை ஓர் நொடியில் பொசுக்கிவிட
எண்ணினரோ ஒழுக்கமற்ற கயவர் கூட்டம்
பக்கத்தில் நாம் இருக்க பாதகர்கள் செய்தசதி
பகற்கனவாய் போயிருந்தால் பாவிகள் நாம்
படுந்துன்பம் ஏதும் இல்லை எங்களுக்கே
மூவிரண்டு ஆண்டுகள் முடிந்துதான் போனதையா!
அகிலத்தில் நாம் வாழ்வதிலே அர்த்தமொன்று
உண்டென்றால் மறுபடியும் உன் மனைவந்து
மடியினில் நீ தவழ்ந்திடையா!

அம்மா, டடா, அண்ணா

மலர்வு
08.11.1985
மறைப்பு
01.08.2007

நிலா இல்லம்,
[illegible] நிலைய வீதி,
கொக்குவில்.
(3501)
01.08.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை


## 2013 (ஓகஸ்ட்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# பௌதீகவியல் – II

### பகுதி - A - அமைப்புக் கட்டுரை

**நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1. திண்ம மேற்பரப்புகளுக்கிடையில் செயற்படும் உராய்வு விசைகளை ஆராய்வதற்கு பயன்படுத்தப்படும் பரிசோதனை ஒழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளது. கரடான கிடைமேசையின் மேல் $m_0$kg திணிவுள்ள மரக்குற்றியொன்று வைக்கப்பட்டுள்ளது. இக்குற்றியில் கிடைவிசை F, k விசை மாறிலி உடைய கிடையான விற்சுருளை பயன்படுத்திப் பிரயோகிக்கப்படுகின்றது. நியம நிறைப்படிகள் தரப்பட்டுள்ளன.





(i) விற்சுருளின் நீட்சியை அளப்பதற்கான பரிசோதனை ஒழுங்கை படத்தில் வரைக.

(ii) இக்குற்றியில் செயற்படும் செவ்வன் மறுதாக்கத்தை அதிகரிப்பதற்கு உமது செயன்முறையைத் தருக.

(iii) குற்றியில் 10N கிடைவிசை பிரயோகிக்கப்படுகின்றது. குற்றி வழுக்கவில்லை. செவ்வன் மறுதாக்கம் அதிகரிப்பின் அதில் செயற்படும் உராய்வு விசை அதிகரிக்குமா, குறையுமா அல்லது மாறாதிருக்குமா? உமது விடைக்கான காரணம் என்ன?

(iv) குற்றியில் 10N கிடை விசை பிரயோகிக்கப்பட்டு நிலைக்குத்தாக மேல்நோக்கிப் பிரயோகிக்கும் விசை குற்றி வழுக்க ஆரம்பிக்க முன் பூச்சியத்திலிருந்து அதிகரிக்கின்றது. கீழுள்ள கணியங்கள் அதிகரிக்குமா, குறையுமா, மாறாதிருக்குமா?





(a) குற்றியில் செயற்படும் உராய்வு விசையின் பருமன்?

(b) செவ்வன் மறுதாக்கம்

(c) குற்றியில் செயற்படும் நிலையியல் எல்லை உராய்வு விசை

(v) இக்குற்றி சாய்தளமொன்றில் வைத்து சாய்தளம் சரிக்கப்படுகின்றது. $\theta=\theta$ ஆகும்போது குற்றி மட்டுமட்டாக வழுக்க ஆரம்பிக்கின்றது. குற்றிக்கும் சாய்தளத்துக்குமிடையிலுள்ள நிலையியல் உராய்வுக் குணகத்துக்கு தொடர்பொன்றைப் பெறுக.





(vi) சாய்தளம் சரிக்கப்படும்போது குற்றி சிறிது தள்ளி விடப்படும். $\theta=\theta_2$ குற்றி மாறாவேகத்துடன் இயங்குகின்றது. இயக்கவியல் உராய்வுக் குணகத்திற்கு தொடர் பொன்றைப் பெறுக.

(vii)(vi) இல் உள்ள சாய்வு $\theta=\theta_1$ எனின் குற்றியின் ஆர்முடுகலுக்கு தொடர்பொன்றைப் பெறுக.

(viii)(vii) இல் குற்றி மீது ஒத்த இன்னுமோர் குற்றியை பொருத்தியிருப்பின் ஆர்முடுகலின் பெறுமதி மாறுமா? உமது விடையை விளக்குக.

2. நீரின் ஆவியாதலின் தன் மறை வெப்பத்தை தீர்மானிப்பதற்கு மாணவனொருவனால் செய்யப்பட்ட பரிசோதனை ஒழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளது. குழாய் B கொதிநீராவியை வெளியிலெடுப்பதற்குப் பயன்படுகின்றது.




(i) குழாய்கள் A யையும் B யையும் பிழையாகப் பொருத்தியுள்ளான். அவற்றை எவ்வாறு சரியாகப் பொருத்துவீர்?

குழாய் A : .................... குழாய் B: ........................

(ii) குழாய் B யினது வெளிவழி நேராக முகவையினுள் உள்ள நீரினுள் அமிழ்த்தப்பட்டுள்ளது. இச்செயன்முறை தவறானது. ஏன் என விளக்குக.

(iii)(ii) இல் செயன்முறையை திருத்தமாகச் செய்வதற்கும் B யின் வெளிவழியில் இன்னோர் ஆய்கருவி இணைக்கப்படல் வேண்டும். இவ் ஆய்கருவித் துண்டை கீழே வரைந்து நீராவி நீரினுள் செலுத்தப்படும் விதத்தை காட்டுக.

(iv) கண்ணாடி முகவைக்குப் பதிலாக செப்புக் கலோரி மானியைப் பயன்படுத்தச் சொல்லி ஆசிரியர் கூறுகின்றார். இதற்கான காரணம் என்ன?

(v) மேலுள்ள மாற்றங்களைச் செய்த பின் பரிசோதனையின் திருத்தத்தை மேம்படுத்துவதற்கு என்ன முற்காப்பைச் செய்ய வேண்டும்?

(vi) நீர் எடுக்க வேண்டிய அளவீடுகள் என்ன?


(a)......................... (b).................... (c)..........................
(d)......................... (e).................... (f)..........................

(vii) கலோரிமானித் திரவியத்தின் தன்வெப்பக் கொள்ளளவு $C_b$, நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $C_w$ எனின் நீர் எடுத்த அளவீடுகளின் அடிப்படையில் நீரின் ஆவியாதலின் தன்மறைவெப்பம் L க்கு சமன்பாடொன்றை எழுதுக.

(viii) வழமையாக கொதிநீராவியின் வெப்பநிலை 100°C எனக் கருதப்படுகின்றது. ஆனால் மலைநாடுகளில் இவ்வாறு கருத முடியாது. இதற்கான காரணம் என்ன?

(ix) இச்சந்தர்ப்பத்தில் கொதிநீராவியின் வெப்பநிலையை அளக்க உமது செயன் முறையைத் தருக.

3. படத்தில் காட்டியுள்ள சுரமானி இரு உலோகக் கம்பிகள் $W_1$, $W_2$ வைக் கொண்டுள்ளது. $W_1$ இன் ஒரு முனை நிலைப்படுத்தப்பட்டு மற்றைய முனை M என்னும் திணிவைக் காவுகின்றது. கப்பி P ஒப்பமானது கம்பி $W_2$R, S என்னும் ஆணிகளுக்கிடையில் மாறா இழுவையில் பேணப்படுகின்றது.




(i) கம்பி $W_1$BC இன் நடுப்புள்ளியில் அருட்டப்படும்போது கம்பி அடிப்படை அதிர்வெண்ணில் அதிர்கின்றது. BC க்கிடையில் உள்ள அலைக்கோலத்தை வரைக. BC க்கிடையில் உள்ள தூரம் $l_0$ எனின் குறுக்கலையின் அலைநீளம் $\lambda_0$ க்கு தொடர்பொன்றை எழுதுக.

(ii) இவ்வகையான நிலை அலை எவ்வாறு தோன்றுகிறது?

(iii) கம்பி $W_1$ இல் உள்ள இழுவை T அலகு நீள இழையின் திணிவு m எனின் அடிப்படை அதிர்வெண் $f_0$ க்கு தொடர்பொன்றை எழுதுக.

### பகுதி B

**நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**


5. (i) r ஆரையுடைய வட்டத்தில் மாறாக் கோணக்கதி ω உடன் வலம் வரும் துணிக்கையொன்றின் மையம் நோக்கிய ஆர்முடுகலுக்குத் தொடர்பொன்றை எழுதுக.

(ii) புவியை 6400 km ஆரையுடைய கோளமாகக் கருதப்படலாம். அது வட-தென் முனைகளினூடான அச்சுப்பற்றி மாறாக் கோணக்கதியில் சுழல்வதாகக் கருதப்படலாம்.

(a) புவி அதன் அச்சுப் பற்றி எத்திசையில் சுழல்கின்றது?

(b) புவியின் அச்சுப்பற்றி அதன் சுழற்றிக் காலம் என்ன? அதன் கோண வேகத்தைக் காண்க.

(c) புவி மேற்பரப்பில் பூமத்திய ரேகையில் நிறுக்கும் பொறியொன்றில் நிற்கும் மாணவனொருவனைப் படம் காட்டுகின்றது. மாணவனில் செயற்படும் சுயாதீனப் பொருள் விசைகளை படத்தில் குறிக்க.




(d) புவியின் நாளாந்த சுழற்சி காரணமாக மாணவன் புவியின் அச்சுப்பற்றி வட்ட இயக்கத்தை ஆற்றுகின்றான். மாணவனின் திணிவு 55Kg எனின் அவனில் செயற்படும் விளையுள் விசையைக் காண்க.

(e) மாணவனின் நிறை 539N எனின் தராசு என்ன வாசிப்பைக் காட்டும்?

(f) வடதுருவத்தில் தராசொன்றில் அம்மாணவன் நிற்பின் தராசின் வாசிப்பு என்ன? உமது விடைக்கான காரணத்தை தருக.

(g) θ அகலாங்கு உள்ள ஒரு புள்ளியில் மாணவனின் தோற்ற நிறை புவியின் அச்சுப்பற்றிய சுழற்சி காரணமாக பருமனிலும் திசையிலும் வேறுபட்டதாகவே இருக்கும். இதற்கான காரணம் என்ன?

6. பூரண சந்திரனின் தெளிவான விம்பத்தைத் திரையில் விழுத்துவதற்கு ஒருங்கு வில்லையொன்று பயன்படுத்தப்படுகிறது.

(i) சந்திரன் வில்லையின் பார்வைப்புலமையத்தில் உள்ளதாகக் கருதி இவ்விம்பம் உருவாவதைக் காட்டும் கதிர்ப்படத்தை வரைக.

(ii) சந்திரனின் விட்டம் $3.5 \times 10^3$km புவியிலிருந்து அது $3.8 \times 10^5$km தூரத்தில் உள்ளது.

(a) புவியில் உள்ள அவதானி ஒருவரின் கண்ணுடன் சந்திரன் அமைக்கும் கோணத்தை rad இல் தருக.

(b) வில்லையின் குவிய நீளம் 30cm எனின் திரையில் தோன்றும் சந்திரனின் விம்பத்தின் வட்டத்தைக் காண்க.

(c) அவதானி திரையில் பெற்ற விம்பத்தை 25cm தூரத்திலிருந்து அவதானிப்பின் அது கண்ணுடன் அமைக்கும் கோணம் என்ன?

(d) இவ்வில்லையைப் பயன்படுத்துவதன் மூலம் அடைந்த கோணப் பெரிதாக்கத்தைக் காண்க.

(e) குவிய நீளம் கூடிய வில்லையைப் பயன்படுத்தின் இது கோணப் பெரிதாக்கத்தில் என்ன விளைவை ஏற்படுத்தும் என விளக்குக.

(iii) ஒன்று பொருளியாகவும் மற்றையது பார்வைத் துண்டாகவும் இரு ஒருங்கு வில்லைகளைப் பயன்படுத்தி பெரிய கோணப் பெரிதாக்கத்தைப் பெறலாம். திரையிலிருந்து அதற்கு அப்பால் 5cm தூரத்தில் 5cm குவிய நீளமுள்ள ஒருங்கு வில்லையை வைத்து திரை அகற்றப்படுகின்றது. அவதானி சந்திரனை பார்வைத்துண்டு பொருளிகளினூடாக அவதானிப்பின் புதிய கோணப் பெரிதாக்கம் என்ன?

பெரிய கோணப் பெரிதாக்கத்தைப் பெறுவதுடன் இந்நிலையில் பெற்ற விம்பத்திற்கும் ஒரு வில்லையால் பெற்ற விம்பத்திற்கும் இடையில் இன்னொரு வித்தியாசம் என்ன?

(iv)(a) தொலைவில் உள்ள இரு நட்சத்திரங்கள் வேறாகத் தெரிவதற்கு அவற்றால் பொருளியில் அமைக்கும் மிகச் சிறிய கோணம் $\theta = \frac{1.22\lambda}{D}$ ஆல் தரப்படும். λ அவற்றிலிருந்து பெறப்படும் சராசரி அலைநீளம் D பொருளியின் விட்டம், θ தொலைகாட்டியின் பிரிக்கை வலு எனப்படும். தொலைகாட்டியின் பொருளியின் விட்டம் 200mm நட்சத்திரங்களிலிருந்து பெறப்படும் ஒளியின் சராசரி அலைநீளம் $6 \times 10^{-7}$m. பிரிக்கை வலுவைக் காண்க.

(b) இரு நட்சத்திரங்கள் $2 \times 10^{-6}$ rad கோணம் அமைப்பின் இவற்றைப் பிரித்தறிய முடியுமா? உமது விடையை விளக்குக.

7. (i) சில நிபந்தனைகளில் சிறிய நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து பெரிய நீர்த்துளிகள் ஆகின்றன. 40μm ஆரையுடைய ஒரு நீர்த்துளி உண்டாவதற்கு 10μm ஆரையுள்ள எத்தனை நீர்த்துளிகள் தேவை?

(ii) இந் 40μm ஆரையுடைய நீர்த்துளி நிலையான வளியினூடாக நிலைக்குத்தாக விழும்போது வளியின் பாகுநிலை காரணமாக முடிவு வேகத்தை அடைகின்றது. வளியால் மேலுதைப்பைப் புறக்கணிப்பின் இம் முடிவு வேகத்தைக் காண்க.

நீரின் அடர்த்தி = $1000 Kgm^{-3}$


வளியின் பாகுநிலைக் குணகம் = $1.6 \times 10^{-5}$Pa

(iii) ஆவியாதல் காரணமாக இத்துளியின் ஆரை குறைகின்றது. ஆரை 20μm எனின் முடிவு வேகம் என்ன?

(iv) இத்துளி கோளவடிவாக இருப்பதற்கு காரணம் என்ன?

(v) துளியின் ஆரை 100μm இலும் பெரிதாகும்போது மழைத்துளியின் வடிவம் கோளவடிவத்திலிருந்து வேறுபடும். இதற்கான காரணம் என்ன?

(vi)(v) இல் உள்ள துளியின் உயரம் h(>100μm) அது வளியினூடாக மாறாக் கதியில் விழுகின்றது. வளி மண்டல அமுக்கம் π. இத்துளியில் மேல் முனையில் ஆரை $R_1$ கீழ்முனையில் ஆரை $R_2$ நீரின் மேற்பரப் பிழுவிசை T எனில்




(a) A யில் அமுக்கத்திற்கு தொடர்பொன்றை எழுதுக.

(b) B யில் அமுக்கத்திற்கு தொடர்பொன்றை எழுதுக.

(c) இத்துளி சமநிலையில் இருப்பின் உயரம் h க்கு தொடர்பொன்றை எழுதுக.

(மிகுதி நாளை...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



## ஆன்மீகம் 75

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...இங்கிருந்து கீழ்நோக்கி ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அருவி விழும் ஆனந்தக்காட்சியைக் கண்டு அகமகிழலாம். வழியில் அநேக சித்தர்கள் வாழ்ந்த குகைகள் காணப்படுகின்றன. இது பற்றியெல்லாம் சித்தர்பெருமானிடம் அறிவித்தோம். வழியெங்கும் பசுமைப் போர்வை ஏராளமான அபூர்வமூலிகைகள் காற்றில் அசைந்து கொண்டிருக்கின்றன. மூலிகைகள் பல முன்பே அறிமுகமானவைஎன்றாலும் சில புதிய மூலிகைகள் என் கவனத்தை கவர்ந்தன. பாறை இடுக்குகளில் காணப்பட்ட ஒரு தாவரம் புளிய இலைகள் மாதிரி இலைகளோடு காணப்பட்டது. அதை சுட்டிக்காட்டி சாமி, இது என்ன செடி என்று கேட்டேன்? பரவாயில்லையே இது மூலிகைதான் என்ற அளவு விபரம் வந்து விட்டதே. என்று பாராட்டியவர் இதைக்கொண்டு பல் துலக்கினால் ஆடிக்கொண்டிருக்கும் பாட்டியின் பற்கள் கூட பாறை போல் இறுகிவிடும்! இது ஒரு அற்புதமான மூலிகை என்றார. உடனே அதைப் பரிசோதிக்கும் ஆவலால் தூண்டப்பட்டவனாக அவசரஅவசரமான அந்த செடிகளில் சிலவற்றைப் பறித்து எடுத்து வைத்துக்கொண்டேன். கீழே அருவிக்குச் சென்றவுடன் அந்த இலையை உடன் வந்த சிலருக்கும் கொடுத்துவிட்டு நானும் பல் துலக்கினேன். துலக்கிய பின் வாயிலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. பற்களில் ஒரு விதமான விறுவிறுப்பு ஏற்பட்டது. இந்த விந்தை செயல்கள் என்னை வியப்பில் ஆழ்த்தின. மனதிற்குள் சித்தர் பெருமானுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன்.

ஆகாச அருவி! சற்றேறக் குறைய சுமார் ஐநூறு அடிகள் உயரத்திலிருந்து வீழ்கிறது. காற்றில் அதன் சாரல் ஊசிச் சாரல்களாக கீழ்நோக்கி பரவலாக பரவி இருக்கின்றன. அவை நம்மீது விழும்போது சிறு ஊசி முனையால் குத்தப்படுவது போன்ற உணர்வு! குளிர்ந்த பன்னீரை வாரி இறைத்துக்கொண்டிருந்தன. எங்களை வரவேற்பதுபோல்! இதில் குளித்தாலே பல பாவங்கள தீரும் என்று ஆசான் சொன்னதும் அனைவரும் பாவம் போக்கியே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தாற்போல் அருவியில் குளிக்கத்துவங்கினர். தண்ணீரில் கால் வைத்ததுமே உடலில் மின்சாரம் பாய்வது போன்று இருந்தது. குளிர்ந்த நீரில் குளித்தும் குளிரில் உடல் நடுங்கவில்லை! இதுமாதிரி உணர்ச்சிகள் எல்லா அருகளிலும் ஏற்படாது. இது மூலிகைககள் சக்தியோடு கலந்து வருவதால் உடல் தளர்ச்சி உடனே நீங்கி உற்சாகத்தைத் தந்து உள்ளத்தை உவகையில் தள்ளுகிறது.



கொல்லி மலையில் ஆகாச அருவியின் ஓரம் பாறையில் அன்னதானம்.

அதோடு இது பல பிணிகளை தீர்க்கும் அரிய ச்க்தி படைத்தது. இந்த அருவியின் அருகில் குகை ஒன்று உள்ளது. இதுபோன்ற குகைகளில் இன்றும் பல சித்தர்கள் வாசம் செய்கிறார்கள். இவைகளில் அதிசயங்கள் ஒளிந்து கிடக்கின்றன. இது போன்ற குகைகளில்தான் சஞ்சீவி மூலிகைகளும் நோய் தீர்க்கும் அபூர்வ மூலிகைகளும் முறையோடு செய்யப்பட்ட செந்தூரங்கள்,குளிகைகள் போன்ற மனிதகுலம் உயர்வதற்காக சித்தர்களால் செய்யப்பட்ட அருமருந்துகள், சித்தர்களாலே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அசுரர் காலம் பிறக்கப்போகிறது என்ற செய்தியை அறிந்தவுடன் அவர்களின் வசம் இம்மருந்துகள் கிடைத்தால் அவர்களின் பலம் பலமடங்காக பெருகிவிடுமே. இதனால் நல்லவர்கள் நலிந்து போவார்கள்! நாடு நாசமாகும். என்று அஞ்சி தெய்வீகக் காலம் பிறந்த பின்னர் இவை நாட்டுக்கு உதவட்டும் என்று முடிவு செய்து அவைகளை இதுபோன்ற குகைகளில் மறைத்துவைத்துவிட்டு மறைந்தார்கள் என்ற செய்தியை சித்தர் அவர்கள் என்னிடம் முன்பே கூறியிருந்தார்கள்.

தொடரும்

# நாகர்கள் இலங்கையின் பழங்குடி மக்கள்

## பாகம் 05

நாகதீப வருகைக்குப் பின்னர் 3 ஆண்டுகள் கழித்து களனி எனப்படும் கல்யாணி என்ற நதிக்கரையை ஆண்டு கொண்டிருந்த மனியக்கியா மற்றும் அவனுடைய சகோதரன் மகோதரா ஆகியோரது அழைப்பின் பேரில் விசாக மாதத்தின் பௌர்ணமி இரண்டாம் நாள் 500 பௌத்த தேரர்களையும் அழைத்துக்கொண்டு நாகமன்னன் மனியக்கியா இருந்த இடத்தை புத்தர் அடைந்தார். நாக மன்னன் அவர்களுக்கு இனிய உணவு கொடுத்து உபசரித்தான்.

அவர்களுக்குப் போதனைகள் செய்த பின்னர் சுமன கூடம் என்ற மலை அடிவாரத்தை நோக்கித் தம் பரிவாரங்களுடன் நடந்து சென்று இளைப்பாறினார். பின்னர் திகவாபி என்ற இடத்தைச் சென்றடைந்தார். அந்த இடத்தில் அமர்ந்து தியானம் செய்து அந்த இடத்தைப் புனிதமாக்கினார். அங்கிருந்து புறப்பட்டு அனுராதபுரத்தின் மற்றொரு பகுதியில் இருந்த சிலாசெத்தியா என்ற இடத்துக்குச் சென்று அங்கு வாழ்ந்த மக்களுக்கு அறிவுரைகளை வழங்கிய பின்னர் மீண்டும் ஜெத்வனத்துக்குத் திரும்பினார். நதியருகே தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த இடத்தில் ஸ்தூபி கட்டப்பட்டது. களனியிருந்து சிவனொளிபாத மலைக்குச் சென்று தனது அடிச்சுவட்டைப் பதித்தார்.

முன்னர் குறிப்பிட்டவாறு புத்தர் தனது வாழ்நாளில் வட இந்தியாவை விட்டு வேறு எங்கும் பயணம் செய்யவில்லை. தென்னாட்டுக்குக் கூடப் புத்தர் வந்ததாக வரலாறு இல்லை. இலங்கை தொன்று தொட்டு ஒரு பௌத்த நாடென்றும் அந்த நாட்டுக்கு புத்தர் வருகை தந்து அதனைப் புனிதப்படுத்தினார் என்பதை நிறுவவே மகாவம்ச ஆசிரியர் இந்தக் கதைகளைக் கட்டியுள்ளார்.

புத்தர் மூன்றாவது தடவை இலங்கைக்கு வந்துசென்று 37 ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் விஜயன் இலங்கைக்கு வந்தான் என்பது மகாவம்சத்தின் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது. எனவே, சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் வருவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே இலங்கைத் தீவு முழுவதும் நாகர்கள் வடக்கிலும் வடமேற்கிலும் இயக்கர் தெற்கிலும் வாழ்ந்து ஆட்சி நடத்தி வந்தார்கள் என்பது தெளிவாகிறது.

விஜயன் சந்ததி இல்லாது இறந்தபோது நாகவம்சத்தைச் சார்ந்த அரசர்களே கி.பி 11 ஆம்நூற்றாண்டு வரை அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்துள்ளார்கள். அவர்களது பெயர்கள் நாக என்ற பின்னொட்டோடு முடிகிறது.

மகாவம்சம் இலங்கையின் ஆதிக்குடிகள் என தரச்சர், லம்புக்காணர், பாலிபோஜக, மோரியர், புலிந்தர் இவர்களைக் குறிப்பிடுகிறது. மகாவம்சத்தின் கதைப்படி வேடன் விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்தபிள்ளைகள் எனச் சொல்லப்பட்டுள்ளது. சிங்களவர் காலத்தால் வேடர்களுக்கும் முந்தியவர்கள் எனக் காட்டவே மகாவம்ச ஆசிரியர் இந்தப் புனைந்துரையைப் புகுத்தியுள்ளார்.

வேடர்கள் பெருமளவில் இலங்கையில் குடியேறிய ஆரியர்களோடு நாளடைவில் மணவுறவு மூலம் கலந்தார்கள் என இலங்கையின் பழைய வரலாறு என்ற நூலில் ஜி.சி. மென்டிஸ் குறிப்பிடுகிறார். கண்டிச் சிங்களவர் தென்புலத்தோர்க்குப் படையல் படைக்கும் வழக்கம் வேடர்களது கலப்பினால் ஏற்பட்டதென கலாநிதி செலிக்மன் அபிப்பிராயப்படுகிறார்.

இந்த நாகர்கள், இயக்கர்கள், வேடர்கள் ஆதிதிராவிட இனமக்கள் என்பதும் அவர்கள் சிறந்த நாகரிகம் படைத்தவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. சங்கலகாலப் புலவர்களில் சிலர் வேடர் மற்றும் நாகர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இப்போது குடாநாடாக விளங்கும் யாழ்ப்பாணம் முன்னொரு காலத்தில் அதாவது கி.பி. அனேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தீவுகளாக இருந்தது. மேற்கே நாகதீபம், மணிநாகதீபம், மணிபுரம், மணிபல்லவர் என்னும் பெயர்களால் வழங்கப்பட்ட பெருந்தீவும், கிழக்கே எருமை முல்லைத்தீவு என்று பெயர்பெற்ற சிறுதீவும் இருந்தன.



இவை காலத்துக்குக் காலம் இடம்பெற்ற கடற்கோள்களினால் பெரும்பகுதி அழிந்து போயின. இன்று யாழ்ப்பாணக்குடா நாட்டைச் சுற்றியிருக்கும் புங்குடுதீவு, அனலதீவு, மண்டைதீவு போன்ற தீவுகள் அப்பெருந்தீவகத்தின் மிஞ்சிய பகுதிகளேயாகும்.

கி.மு 10 ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவை ஆண்ட பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுணன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டபோது இன்றைய கீரிமலையான நகுலமலையைக்கொண்ட மணிபுரத்துக்கு வந்தானென்றும் அந்த நாட்டு நாக அரசனின் மகள் சித்திரங்கதையைக் கண்டு காதல் கொண்டு அவளைத் திருமணம் செய்தானென்றும் பாரதக்கதையில் சொல்லப்படுகிறது. அர்ச்சுணன்– சித்திரங்கதை இருவருக்கும் பிறந்த சித்திரவாகன் என்பான் தனது தந்தையாகிய அர்ச்சுணனைப்போரில் வென்றான் என்றும் அவனது கொடி சிங்கள கொடி என்பதும் மகாபரதத்தால் அறியப்படும்.

### நாகர்க்ள வரலாறு

இலங்கையில் ஆதியில் வாழந்த இயக்கர், நாகர் என்பார் மனித வர்க்கத்தினரைச் சேர்ந்தவரல்லர் என்ற கருத்துப்பொதுவாக வரலாற்று-ஆசியாரிகளிடையே நிலவி வந்துள்ளது. எனினும் இலங்கையின் வரலாற்றை ஆராய்பவர்கள் இந்த இரு இனத்தைச் சேர்ந்தவர்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்ற முடிவுக்கு வருவார்கள்.சிறப்பாக இயக்கர் என அழைக்கப்பட்டோர். இராவணன் இயக்க குல அரசன் என்பது இராமாயணம் போன்ற இதிகாசங்களால் அறியப்படும்.

நாகர்கள், இயக்கர்கள் என்பவர்கள் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இன்னமும் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலே திராவிட இனப்பண்பாட்டோடு தொடர்புடைய பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. நாகர்களும் இயக்கர்களும் திராவிடர்களாக– தமிழர்களாக– இருக்க வேண்டும் என்ற கருதுகோள் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவின் வடகீழ் எல்லைப் புறத்திலே நாகர்கள் என்ற மங்கோலியத் தொடர்புள்ள இனத்துக்கு நாகலாந்து என்ற தனி மாநிலம் காணப்படுகிறது. வரலாற்றுக்காலத்துக்கு முன்பும் வரலாற்றுக் காலத்திலும் நாகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கிடைக்கின்றன. நாகமன்னர்கள் ஆரிய மன்னர்களோடும் திராவிடமன்னர்களோடும் வேறுபாடுகாட்டாது கலப்புகளை ஏற்படுத்தி வந்துள்ளனர்.

பண்டைக்காலத் தமிழகத்திலே சேரநாடு என்று பெயர் பெற்றிருந்த நிலப்பரப்பின் பெரும்பகுதியாக அமைந்து இன்று தமிழோடு ஒப்புமைகள் பலவற்றைக் கொண்டு விளங்கும் மலையாளமொழி வழங்கும் கேரளா மாநிலத்தில் நாயர் என்ற சமூகத்தினர் வாழுகின்றனர். நாகபாம்பு வழிபாட்டின் எச்சசொச்சங்கள் அவர்களிடையே இன்றும் காணப்படுகின்றன. நாகர் என்ற சொல் நாயர் என்று திரிந்து வழங்குகிற தெனக்

நக்கீரன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார நிறுவனங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

சுகாதார அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்களில் கடமையாற்றி வரும் பெண்கள் அதிகளவில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

முறைப்பாடுகள் குறித்து சுகாதார திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

விசாரணை நடத்தும் அதிகாரிகளுக்கு தொழிற்சங்கங்களினால் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி பலர் பேசினாலும் இதுவரையில் அதற்கு எதிராக எவரும் நடவடிக்கை எடுத்ததாகவில்லை.

வீடுகளை விடவும் அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் பெண்கள் அதிகளவில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்.

டை, கோர்ட் அணிந்து கம்பீரத்துடன் இருக்கும் அதிகாரிகள் செய்யும் இழி செயல்களை நாம் அறிவோம். குற்றச் செயல்கள் தொடர்பில் நிறுவன ரீதியான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்ற காரணத்தினால் எதிர்காலத்தில் பொலிஸாரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## தேர்தல் பிரசாரத்திற்கு அரச வளங்கள் பயன்பாடு

### ஜே. வி. பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் தனது தேர்தல் பிரசாரத்திற்காக அரச வளங்களையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி வருவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் தனது வெற்றியை உறுதிப்படுத்த வழமையாக நடத்துவது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக தேர்தலை நடத்தி வருகிறது. குறிப்பாக வடக்கு மாகாண சபைத்தேர்தலை இந்தியாவின்தேவைக்காக நடத்துகிறதேயன்றி இது நாட்டை குறித்தோ ஜனநாயகத்தை பற்றியோ சிந்தித்து நடத்தப்படும் தேர்தல் அல்ல.

மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்கள் பயன்படுத்தி வந்த வாகனங்கள் மற்றும் வளங்கள் என்பவற்றை அவர்கள் தொடர்ந்தும் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

பொலிஸ்துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. சுயாதீன காவற்றுறை ஆணைக்குழு இல்லாத நிலையில் இந்த விடயம் நேரடியாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பிரதிபலிக்கும்.

அரசாங்கம் ஏற்கனவே வன்முறைத் தாக்குதல்கள் உள்ளிட்ட தேர்தல் மீறல்களை ஆரம்பித்துள்ளது. அமைச்சர்களின் புதல்வர்கள் வீதியில் சண்டையிட்டு கொள்கின்றனர்.

வடக்கில் அரைகுறை இராணுவ ஆட்சியே நிலவுகிறது. அங்குள்ள மக்களின் பொருளாதார, சமூக பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் தவறியுள்ளது. நாட்டில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன.

இதனால் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பு எழுந்துள்ளது. இதனை மறைப்பதற்காக அரசாங்கம் தரம் தாழ்ந்த துரும்புச் சீட்டுக்களைப் பயன்படுத்துகிறதுணவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## சிகரெட்டுக்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி கோல்ட்லீப் ரக சிகரெட் 3 ரூபாவாலும் ஏனைய சிரெட்டுக்கள் 2 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையில் சிகரெட் ஒன்றின் விலை 25 ரூபாவில் இருந்து பல்வேறான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் மதுபானங்களின் விலைகளும் விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலையுயர்வுகளை அடுத்து புகையிலை பாவனை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் அதன் பாவனையாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை அண்மைய புள்ளிவிபரம் ஒன்று எடுத்துக் காட்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

## 08.2013 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


* 1291 - சுவிஸ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
* 1461-நான்காம் எட்வேர்ட் லண்டனின் மன்னனாக முடி சூடினான்.
* 1492- ஸ்பெயினில் இருந்து யூதர்கள் துரத்தப்பட்டனர்.
* 1498-கொலம்பஸ் வெனிசுவேலாவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
* 1619-முதலாவது ஆபிரிக்க அடிமைகள் வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரை அடைந்தனர்.
* 1774-ஒட்சிசன் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1800 - பெரிய பிரித்தானிய இராச்சியம், அயர்லாந்து இராச்சியம் ஆகியன பெரிய பிரித்தானியா, அயர்லாந்து ஐக்கிய இராச்சியம் என்ற பெயரில் இணைந்தன.
* 1820-லண்டனில் றீஜண்ட் கால்வாய் திறக்கப்பட்டது.
* 1831-புதிய லண்டன் பாலம் திறந்து வைக்கப்பட்டது.
* 1876 -கொலராடோ ஐக்கிய அமெரிக்காவின் 38 ஆவது மாநிலமாக ஏற்கப்பட்டது.
* 1894-கொரியா தொடர்பாக சீனாவுக்கும் ஜப் பானுக்கும் இடையில் போர் தொடங்கியது.
* 1902-பனாமா கால்வாயுக்கான உரிமையை ஐக்கிய அமெரிக்கா பிரான்சிடம் இருந்து வாங்கியது.
* 1907-சாரணிய இயக்கத்தின் முதல் பாசறையை பேடன் பவல் லண்டனில் பிறௌன்சி தீவில் ஆரம்பித்து வைத்தார். இது ஓகஸ்ட் 9 வரை நீடித்தது.
* 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி ரஷ்யாவுடன் போர் தொடுத்தது.
* 1914 - இலங்கையில் மன்னாருக்கும் மத வாச்சிக்கும் இடையில் பகல் நேர தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
* 1927 - சீன உள்நாட்டுப் போரின் முக்கிய சமர் கொமிந்தாங் படைகளுக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் இடை யில் "நான்சாங்" என்ற இடத்தில் இடம் பெற்றது. இந்நாள் மக்கள் விடுதலை இராணுவத்தின் ஆரம்பிக்கப்பட்ட நாளாக நினைவுகூரப்படுகிறது.
* 1936-பெர்லினில் 11ஆவது ஒலிம்பிக் விளை யாட்டுக்கள் ஆரம்பமாகின.
* 1941-முதலாவது ஜீப் வண்டி உருவாக்கப்பட்டது.
* 1960 - டஹோமி (பெனின்) பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
* 1960-பாகிஸ்தானின் தலைநகராக இஸ்லாமாபாத் அறிவிக்கப்பட்டது.
* 1964-பெல்ஜிய கொங்கோவின் பெயர் கொங்கோ குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.
* 1967 - கிழக்கு ஜெருசலேம் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டது.

**பிறப்புகள்**

* 1946 - குப்பிழான் ஐ. சண்முகம், ஈழத்து எழுத்தாளர்
* 1949 - குர்மான்பெக் பாக்கியெவ், கிர்கிஸ்தான் ஜனாதிபதி

**இறப்புகள்**

* 1920 -பால்கங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1856)
* 2008-ஹர்கிஷன் சிங் சுர்ஜீத், இந்திய மாகசிய கம்யூனிசத் தலைவர் (பி. 1916)
* 2009-கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் (பி. 1933)



* 2007- யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவன் ச. நிலகசன் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

### ஒட்சிசன்

ஒட்சிசன், (Oxygen) நாம் வாழும் நில உலகத்தில் யாவற்றினும் மிக அதிகமாகக் கிடைக்கும் தனிம வேதிப் பொருள். வளிமண்டலக் காற்றில் நைதரசனுக்கு அடுத்து செழிப்புற்றிருப்பது ஒட்சிசன். இது பெரும்பாலும் பிற தனிமங்களோடு இணைந்த நிலையிலேயே நில உலகத்தில் கிடைக்கின்றது. இதன் செழுமை (பரும அளவில்) 20.95 வீதம். நீர் மண்டலப் பகுதியில் ஒட்சிசனின் செழுமை (எடை அளவில்) 85.89 வீதம். பூமியின் மேலோட்டுப் பகுதியில் கிடைக்கும் கனிமங்களில் ஒட்சைடாகக் கிடைக்கிறது.அந்த வகையில் இதன் செழுமை (எடை அளவில்) 49.13 வீதம். மனித உடலில் 3, இல் 2 பங்கும், நீரில் பத்தில் 9 பங்கும் ஒட்சிசனாகும். ஓர் ஒட்சிசன் அணுவின் கருவினுள்ளே 8 நேர்மின்னிகளும் அதற்கு இணையாக கருவைச்சுற்றி 8 எதிர்மின்னிகளும் பல்வேறு சுழல் பாதைகளில் சுழன்றும் வருகின்றன. எனவே, ஒட்சிசனின் அணுவெண் 8 ஆகும். அணுக்கருவினுள் நேர்மின்னிகள் அன்றி 8 (நியூட்ரான்களும்) உள்ளன.

நில உருண்டையின் காற்று மண்டலத்தில் உள்ள வளிமங்களில் முக்கியமான இரண்டு வளிமங்களில் ஒட்சிசன் ஒன்றாகும் (மற்றையது நைதரசன்). உயிரினங்களின் உயிர்வாழ்வுக்கும் மிக இன்றியமையாது தேவைப்படுவது இந்த ஒட்சிசன். இதனால் இது உயிர்வளி என்றும் பிராணவாயு என்றும் அழைக்கப்படுகிறது. எனினும், நிலவுருண்டையின் வரலாற்றில் தொல்பழங்காலத்தில் ( சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்) இருந்த உயிரினங்களுக்கு ஒட்சிசன் ஒரு நச்சுப் பொருளாக இருந்தது. அன்றிருந்த உயிரினங்களுக்குஒட்சிசன் தேவை இல்லாமல் இருந்தன. ஆனால், சில வகையான நுண்ணுயிரிகளின் நுண்ணுடலின் இயக்கத்தின் விளைவால் ஒட்சிசன் வெளிவிடப்பட்டது. இப்படி ஒட்சிசன் அதிகம் வெளியிடப்பட்டதால் அன்றிருந்த உயிரினங்கள் மாய்ந்தன என்றும் அறிஞர்கள் கருதுகின்றார்கள். பிற்காலத்தில் நில உலகத்தில் ஒட்சிசனின் அளவு கூடியதற்குக் காரணம், ஒளிச்சேர்க்கை வழி ஆற்றல் பெற்று ஒட்சிசனை வெளிவிடும் நுண்ணுயிர்களின் இயக்கத்தால்தான் இவ்வகையான ஒளிச்சேர்க்கை நுண்ணுயிரிகளும் பாசி போன்ற எளிய நிலைத்திணை வகைகளும்தான் நிலவுலகில் உள்ள ஒட்சிசனில் முக்கால் பங்கை (3/4) ஆக்கித்தருகினறன. மீதமுள்ள கால் பங்கை (1/4) மரஞ்செடிகொடி வகைகள் ஆக்குகின்றன.

காபனீரொட்சைட் + நீர் + சூரியஒளி ⟶ மாப்பொருள் + ஒட்சிசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசின் இரண்டு முகங்கள்!

## சமந்தா பவரின் பதவியேற்பு மட்டும் நிலைமைகளை மாற்றிவிடாது...!

திருகோணமலையில் இலங்கைக் கடற்படையின் மற்றும் விமானப் படையின் சிறப்பு படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் அளித்துவந்த *பிளாஷ் ஸ்ரைல்* பயிற்சி இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தபோது, வாசிங்டனில் ஐ.நா.வுக்கான புதிய அமெரிக்கத் தூதுவரின் நியமனம் தொடர்பாக செனட் வெளிவிவகாரக் குழு ஆராய்ந்து கொண்டிருந்தது. இந்த இரண்டு விடயங்களும் ஒன்றுடன் ஒன்று நேரடியாகத் தொடர்புடைய விடயங்கள் அல்ல. அதேவேளை, கொஞ்சம் கூடத் தொடர்பேயில்லாத விடயங்களும் அல்ல.

ஐ.நா.வுக்கான தூதுவராக *சுசன் ரைசை*, வெளிவிவகாரச் செயலாளராக்கும் முயற்சியில் தோல்விகண்ட அமெரிக்க அதிபர் ஒபாமா, அண்மையில் அவரை, செனட் ஒப்புதல் தேவைப்படாத, வெள்ளை மாளிகைக்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமித்தார். அதையடுத்து, ஐ.நா.வுக்கான தூதுவராக, சமந்தா பவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தார் ஒபாமா. ஆனால், இந்த நியமனத்துக்கு அமெரிக்க செனட்டின் ஒப்புதல் அவசியம்.

இவர், ஒபாமாவுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த போதிலும், ஒபாமாவின் ஜனநாயகக் கட்சிக்கு சாதாரண பெரும்பான்மையே, இருந்தாலும், செனட்டின் முழுமையான ஆதரவையும் நம்பிக்கையையும் சமந்தா பவர் பெற்றுள்ளார் என்பதுதான் முக்கியமானது.

கடந்தவாரம் செனட் வெளிவிவகாரக் குழுவின் முன்னால், இவரது நியமனத்தை அறிவித்த, வெளிவிவகாரக் குழுவின் தலைவர் றொபேட் மெனென்டெஸ், சமந்தா பவரின் ஐ.நா. பணி இலக்குகள் குறித்து விளக்கமளித்திருந்தார். அதன்போது, சமந்தா பவரின் முன் உள்ள முக்கிய விவகாரங்களில், இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்த விவகாரமும் ஒன்று எனக் குறிப்பிட்டிருந்தார். இப்போது, சிரிய விவகாரத்துக்கு அவர், முதன்மை கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தாலும், இலங்கை விவகாரத்தையும் அவர், கைநழுவ விடப்போவதில்லை என்பது இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

பொஸ்னியப் போரின்போது, ஊடகவியலாளராகப் பணியாற்றிய சமந்தா பவர், தனது போர் அனுபவத்தை வைத்து, எழுதிய நூலுக்கு புலிட்சர் விருது கிடைத்தது என்பதும், அவர் ஒரு மனிதஉரிமைகள் சட்டவாளர் என்பதும், மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலைகளுக்கு எதிரானவர் என்பதும், செனட்டில் அவருக்குப் பலமான ஆதரவு கிடைப்பதற்கு முக்கிய காரணங்கள். இதனால் தான், இல்ங்கை விவகாரத்தில், கடந்த காலத்தில் ஐ.நா. ஊடாக அமெரிக்கா கொடுத்து வந்த அழுத்தங்கள் மேலும் தீவிரமடையுமே தவிர குறையாது, என்ற வலுவான நம்பிக்கை, அரசியல் நோக்கர்களிடையேயும் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, அமெரிக்கா இரண்டு தடவைகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது. மூன்றாவது தடவையும் இதுபோன்ற தீர்மானத்தை ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவருமா என்று, இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளராக இருந்தவரும், இப்போது ஐரோப்பிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளவருமான, விக்ரோரியா நுலன்ட்டிடம் சில மாதங்களுக்கு முன்னர் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அதற்கு அவர், அவ்வாறில்லை என்றும், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அப்பால், இதை எவ்வாறு முன்னெடுப்பது என்று இராஜாங்கத் திணைக்களம் ஆலோசிக்கும் என்றும் பதிலளித்திருந்தார்.

கடந்த மார்ச் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்தும் முன்னெடுப்புகள் எதையும், இலங்கை அரசாங்கம் இதுவரை மேற்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள 25-வது அமர்வு வரையில் தான், இலங்கை அரசாங்கத்துக்கு ஜெனிவா தீர்மானம் கால அவகாசதத்தைக் கொடுத்துள்ளது.

இத்தகையை நிலையில் தான் சமந்த பவர், ஐ.நா.வுக்கான பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர், 9 ஆம் நாள் தொடக்கம் 27ஆம் நாள் வரையிலான காலப்பகுதியில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 24-வது அமர்வு நடைபெறவுள்ளது. இந்த அமர்வுக்கு முன்னர் தான், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இந்தப் பயணம் அதற்கும் முன்னதாகவே, இடம்பெறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், அதுகுறித்த அதிகாரபூர்வ நிகழ்ச்சி நிரல் இன்னமும் வெளியிடப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த, வடக்கு மாகாண சபைத் தேர்தல், எதிர்வரும் செப்ரெம்பர் இறுதியில் நடக்கலாம் என்று எதிபார்க்கப்படும் நிலையிலும், அதற்கு முன்னர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வரவுள்ளார் என்பதாலும், ஜெனிவாவிலும் நடக்கவுள்ள 24-வது அமர்வும் இலங்கைக்கு முக்கிய மானதாகவே, இருக்கும். இதில் இலங்கை தொடர்பான, விவகாரங்கள் ஏதும் நிரற்படுத்தப்படாத போதிலும், அதற்கான வாய்ப்புகள் இல்லை என்று நிராகரிக்க முடியாது. ஏனென்றால், சமந்தா பவரின் நியமனமும், இலங்கை தொடர்பான அவரது நிலைப்பாடும், நவநீதம் பிள்ளையின் பயணமும், சேர்த்து- 24-வது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் குறித்து எந்தக்கேள்வியும் எழுப்படாது என்று கருதுவதற்கில்லை. அந்தக் காலகட்டத்திலேயே வடக்கு மாகாணசபைத் தேர்தலும் நடக்கவுள்ளது என்பதால், அரசாங்கத்துக்கு இது கடும் நெருக்கடியாகவே அமையும். புதிதாக ஐ.நா.வுக்கான தூதுவராக சமந்தா பவர் பதவியேற்ற பின்னர், இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நகர்வுகள் இறுக்கமடையலாம் என்ற கருத்து உள்ளது. இத்தகைய நிலையில் தான், அமெரிக்க் கடற்படையின் பசுபிக் கட்டளை பீடத்தைச் சேர்ந்த சீல் எனப்படும் சிறப்புப் படையின் அதிகாரிகள் பத்துப்பேர், இலங்கைப் படையினருக்கு 18 நாட்கள் திருகோணமலையில் சிறப்புப் பயிற்சிகளை அளித்துள்ளனர். ஒருபக்கத்தில், அமெரிக்கா மனித உரிமைகள் குறித்துப் பேசினாலும்- இலங்கைப் படையினரை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டினாலும், இன்னொரு பக்கத்தில், இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை அளித்துவருகிறது. மனிதாபிமானப் பயிற்சிகளையே இல்ங்கைப் படையினருக்கு அளித்து வருவதாக அமெரிக்கா கூறனாலும் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

பயிற்சிகள் எத்தகையதாக இருந்தாலும், பயிற்சி அளிக்கப்படுபவர்கள் இலங்கைப் படையினர் தான்.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடம் இலங்கைப் படையினருக்கு பல்வேறு வழிகளில் பயிற்சிகள், உதவிகளைக் கொடுத்து வருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைப் பொறுத்தவரையில், இதுபோன்ற இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயம் இல்லை. இலங்கை தொடர்பாக அமரிக்கா இறுக்கமான போக்கை கடைப்பிடிப்பதாக காட்டிக் கொண்டாலும், இன்னொரு பக்கத்தில் அது இணக்கத்துக்கான சமிக்ஞைகளை கொழும்புக்குத் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். அதுதான் அமெரிக்காவின் சாணக்கியம். இலங்கையுடன் முட்டுப்பட்டுக் கொண்டாலும், அதை வெட்டிவிட அமெரிக்கா விரும்பாது.

பாகிஸ்தானை எடுத்துக் கொண்டால் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக இருந்து கொண்டே, சீனாவுக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்கிறது. அவ்வப்போது சீனா விவகாரத்தில், தலிபான்கள் விவகாரத்தில், ஆளில்லா விமானத் தாக்குதல்கள் விவகாரத்தில், பாகிஸ்தானுடன் முட்டிக் கொண்டாலும், அந்த நாட்டை தனது கட்டுக்குள் வைத்திருக்கவே முனைகிறது அமெரிக்கா. அதுபோலவே, இலங்கையுடனும், மனித உரிமைகள் விவகாரத்தில் மோதிக்கொண்டாலும், பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயத்தில் அமெரிக்கா, ஒருபோதும் முரண்பட்டது கிடையாது. பல சந்தர்ப்பங்களில், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்கா உதவிகளையும் வழங்கியுள்ளது. ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. அதேவேளை, அமெரிக்காவுக்கு எப்போதுமே இரட்டை முகம் தான் உள்ளது என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம்.

அமெரிக்கா மட்டுமல்ல இந்தியாவும் கூட இதற்கு விதிவிலக்கானதல்ல.

1980 களின் தொடக்கத்தில், இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளித்த இந்தியா தான், விடுதலைப்புலிகள் மற்றும் தமிழர் இயக்கங்களுக்கும் பயிற்சிகளை கொடுத்தது.

இப்போதும், அரசியல் தீர்வு உள்ளிட்ட விவகாரங்களில் கொழும்புடன் முரண்பட்டுக்கொண்டாலும், ஆண்டுக்கு 800 படையினருக்குப் பயிற்சிகளை அளிக்கிறது இந்தியா. பொதுவாக வல்லரசுகளின் போக்குகள் இவ்வாறுதான் காணப்படுகிறது.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடுவது, அவர்களுக்குக் கைவந்தகலை.

ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவராக சமந்தாபவர் பொறுப்பேற்றுள்ளதால் மட்டுமே, எல்லாமே மாறிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், அமெரிக்காவின் அரசியல், பாதுகாப்பு, இராஜதந்திர நிகழ்ச்சி நிரல் என்பது அமெரிக்காவுக்கானதே தவர, தமிழர்களுக்கானதோ, இலங்கைக்கானதோ அல்ல.

இலங்கையுடன் மோதுவதைவிட, நெருங்குவதே மிகவும் சாதகமானது என்ற கருத்து, எந்தவொரு கட்டத்தில் அமெரிக்காவிடம் ஏற்படுகிறதோ, அப்போதே, இலங்கையில் கடந்த காலத்தில் நடந்த போர்க்குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் அமெரிக்காவுக்கு மறந்துபோய்விடும்.

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை.

ஆனால், ஈழத் தமிழ் மக்கள் அன்றாடம், உணவுக்கான தமது கடும் போராட்டத்திற்காக- உள்ளுக்குள், தமது அரசியல் அபிலாசைக்காக விழித்துக்கொண்டிருக்கும் ஆன்மாவைத் தூங்கவைத்து விடுவார்களானால், எம்மவரை யாராலும் காப்பாற்ற முடியாது.

-ஹரிகரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. நல்லையா நகுலநாதன் அவர்களின்

## (பிரதி அதிபர், யா /நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்)

# சேவை நயப்பு மலர் - 01.08.2013



### ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர்

யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் கடந்த 24 வருடங்களாக அர்ப்பணிப்பான சேவையை நல்கிய பிரதி அதிபர் நல்லையா நகுலநாதன் அவர்களின் சேவை நயப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1977 ஆம் ஆண்டுமுதல் இவர் ஆசிரியர் சேவையில் இணைந்து அளப்பரிய கல்விச் சேவையை கல்விப் புலத்திற்கு வழங்கியுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் தன்னை பொதுச்சேவையிலும் ஈடுபட்டமை பாராட்டத்தக்கவொரு அம்சமாகும்.

இவர் தனது 36 வருட கால அரசசேவையில் நற்பண்புகளும் ஒழுக்கமும் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கிய கல்விப் பணியை வாழ்த்துவதுடன் இப்பணிமேலும் தொடரவும் இவர் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திடவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்கடாட்சம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*சி.சத்தியசீலன், செயலாளர்,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை*
*அமைச்சு, வடமாகாணம்.*

### வறிய மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவியவர்



திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் 24 வருடங்கள் யா/நாவாந்துறை றோ.க.வித்தியா லயத்தில் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்றார். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான இவர் தனது சேவைக்காலத்தில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக அரும்பணியாற்றியுள்ளார். இவர் ஆசிரிய சேவையை சிறப்புடன் ஆற்றி மாணவர்களது கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவராவார். வறிய மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கென அரும்பணியாற்றி பிரதி அதிபராக யா/ நாவாந்துறை வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினது யாழ்.மாவட்டச் செயலாளராகவும் கடமையாற்றி தொழிற்சங்கப் பணியிலும் ஈடுபட்டு ஆசிரியர்களது தொழில்சார் தேவைகளை நிறைவேற்றியுள்ளார்.

இவரது சேவைக்காலத்தில் ஆற்றியுள்ள பணிகளை பாராட்டுவதோடு ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

*செ.உதயகுமார்,*
*வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*

### கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



திரு.நல்லையா நகுலநாதன் அவர்கள் ஓய்வு பெறப்போகிறார் என்ற செய்தி எமக்கு கவலை தரும் செய்தியாகவே உள்ளது. நடமாடும் செயலகம் போன்ற அவரின் பணி என்ன, எங்கு, எப்போது கேட்டாலும் உடனடியாக தரவுகள், தகவல்களை அப்படியே தரும் ஆற்றல் கொண்டவர் நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திலே கால்நூற்றாண்டைப் பூர்த்தி செய்த பெருமை இவரையே சாரும். இவரின் இடைவெளி நிரப்பமுடியாத ஒன்றாகும். ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*சு.சண்முககுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம், யாழ்ப்பாணம்.*

### ஆசிரிய இமயம்



என் கால்நூற்றாண்டுக் கல்விப் பணியில் அசாத்திய ஆற்றல், அபரீதமான அறிவு, அற்புதமான ஆளுமை, ஆழமான அர்ப்பணிப்பு மிக்க எத்தனையோ அதிபர்கள்- ஆசிரியர்களைச் சந்தித்துள்ளேன். இத்தகைய் சிறப்பார்ந்த உயரிய கல்விச் சேவையாளர்களில் எனது கணிப்பில் முதலிடத்திற்குரியவர் மதிப்பிற் குரிய எம் பிரதி அதிபர் திரு.நல்லையா நகுலநாதன் அவர்களே.


கல்விப் பணியாளர்களுக்கு முன்னுதாரணமாகிய அவர் தன் 36 வருடக் கல்விப் பணியில் 24 அகவைகளை எம் பாடசாலை சேவைக்கு அர்ப்பணித்திருப்பது அவரின் தன்னலமற்ற சேவை மனப்பாங்கிற்கு எடுத்துக்காட்டாகும். அவரின் அறிவு - ஆற்றல் - ஆளுமைக்கு பல உயர்பதவிகளையும் புகழ்பூத்த கல்விச் சாலைகளையும் அலங்கரிக்கும் வாய்ப்புக்கள் வந்தபோதும் அவற்றைத் தியாகம் செய்து வசதி - வாய்ப்புக்கள் குன்றிய எம் பிரதேசத்தின் கல்வி விடியலுக்காய் அரும்பணியாற்றியதை நானும் நாவாய் மக்களும் நன்றியுணர்வுடன் போற்றுகின்றோம். நாவாந்துறை பிரதேச மக்களுக்கு அவர் பிரதி அதிபர் அல்ல அவரும் அதிபரே.

திரு.நகுலநாதன் அவர்கள் சிறந்த பேச்சாளர், ஆங்கில மொழித் தேர்ச்சி மிக்கவர். பல்துறை அறிவும் ஸ்தாபன விதிகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளில் புலமையும் மிக்கவர். பிறருக்கு உதவுவதில் பின் நிற்காதவர். பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்கு தன் நிதியீர்ந்தவர். அமைதியான சுபாவமும் எளிமையான வாழ்க்கை முறையும் கொண்டவர். ஆயினும் அநீதிகளைத் தட்டிக்கேட்கத் தயங்காதவர்- தவறாதவர்.

என்னை தோழனாக- ஆலோசகராக இருந்து வழிநடத்தியவர். இவரது பணிவோய்வு எனக்கும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும். இருப்பினும் அவரின் ஆலோசனைகளும் வழிநடத்தலும் எதிர்காலத்திலும் எமக்கு கிட்டும் என உறுதியாக நம்புகிறேன். எம் பிரதி அதிபரின் அர்ப்பணிப்பு மிகு சேவைக்கு நன்றி கூறுகின்றேன். திரு. நகுலநாதன் அவர்களை உன்னத மனிதராக உலகுக்கு தந்த அவரின் பெற்றோருக்கும் பின்புலமாய் இருந்த அவர் மனைவி, பிள்ளைகளுக்கும் நன்றிதனை சமர்ப்பிக்கின்றேன். பணிவோய்வு பெறும் பிரதி அதிபர் அவர்களையும் அவர் தம் குடும்பத்தினரையும் இறையருளுடன் வளமுடன்- நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

கடின உழைப்பே வெற்றி.

*அன்புடன் எப்.எக்ஸ். அன்ரன்.*
*(அதிபர் - நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்)*



### வாழ்க்கைக் குறிப்பு

பெயர் : திரு. நல்லையா நகுலநாதன்
பிறப்பு : 30.05.1954 காரைநகர்
கல்வி : கலாநிதி தியாகராஜா இந்துக்கல்லூரி, காரைநகர்
தகைமை : பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்
சேவை : இலங்கை ஆசிரியர் சேவை (S.L.T.S)-1

**தகவல்**

முதல் நியமனம்: 01.02.1977

**பாடசாலைகள்:**

யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்- 01.02.1977-31.12.1979
பலாலி ஆசிரியர் கலாசாலை-01.01.1980- 31.12.1982
இ/அல் அக்சா ம.வித்தியாலயம் -01.01.1983- 28.02.1988
யா/ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி -01.03.1988- 09.10.1988
யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் -10.10.1988- 31.07.2013
பகுதித்தலைவர்-26.07.1994-09.02.1999
பிரதி அதிபர்- 01.02.1999-01.08.2013
பதில் அதிபர்-11.06.2008- 31.12.2008
பொதுச்சேவை- மாவட்டச்செயலாளர், தமிழ், ஆசிரியர் சங்கம், யாழ்.மாவட்டம்.

**குடும்ப விபரம்**

தந்தை : சிதம்பரப்பிள்ளை நல்லையா
தாய் : நல்லையா பரமேஸ்வரி
மனைவி : வசந்தா நகுலநாதன் (ஆசிரியை)
பிள்ளைகள் : கௌசிகா நகுலநாதன் (மாணவி)
நகுலநாதன் லவலோஜன் (மாணவன்)



### பலரோடும் பண்புடன் பழகும் நகுலன்

யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. நல்லையா நகுலநாதன் அவர்களின் கடமையுணர்வுடன் கூடியசேவையை வாழ்த்துகின்றேன். கல்விச் சேவையிலிருந்து தனது 59ஆவது அகவையில் பணி ஓய்வு பெறுகின்றார் என்ற செய்தி கவலையைத் தருகின்றது. நிர்வாக சேவையிலிருந்து கடமையுணர்வுடையவர்கள் ஓய்வு பெறுவது என்பது கவலையளிப்பதாகும். அவர்களுடைய அனுபவம் மீளப் பெறமுடியாத ஒன்றாகும்.

யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் கடற்கரையோரப் பாடசாலையாகும். அப்பகுதி மக்கள் கடல்தாயின் பிள்ளைகள். அன்றாடம் உயிரைப் பணயம் வைத்து தொழில் புரிபவர்கள். அவர்களுடைய பிரச்சினைகள் தனித்துவமான்து. இந்தச்சூழலில் பெற்றோரைவிட பாடசாலை ஆசிரியர்கள்தான் மாணவர்களை கண்ணும் கருத்துமாக வழிகாட்டும் பொறுப்புடையவர்கள். இத்தகைய உயர்ந்த பொறுப்பினை ஏற்றுச் செயற்பட்டவர் திரு.ந.நகுலநாதன்.

பாடசாலை நிர்வாகம் சிறப்பாக அமைவதற்கு அதிபர் மூலகாரணமானவர். அதிபரின் செயற்பாடுகள் வெற்றியடைவதற்கு பிரதி அதிபர், அதிபர், ஆசிரியர்கள் உறுதுணையாக அமையவேண்டும். நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் எல்லாத் துறையிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இதற்கு உறுதுணையான பிரதி அதிபர் பணியிலிருந்து ஓய்வுபெறுகின்றார் என்பது கவலையாயினும் அவரது ஓய்வுக்காலத்தில் உடல், உள நலத்துடன் நீண்டகாலம் மகிழ்வுடன் வாழ்வதற்கு இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

*சொல்லின் செல்வன் இரா.செல்வவடிவேல், தலைவர்,*
*வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழு.*

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் வாழ்த்து

அன்புள்ளம் அரவணைக்கும்
அன்னை உள்ளம்
புன்சிரிப்பு பூத்தமுகம்
புகழெதுவும் விரும்பா உள்ளம்
கண்ணியம் கடமை நேர்மை
கருத்தினில் கொண்டு என்றும்
தன்பணி தப்பாது செய்த
தகைமைசேர் பிரதி அதிபர்
நம்மவர் பள்ளி தன்னில்
நகுலநாதனார் கல்வி ஊட்டி
கால்நூற்றாண்டை இங்கு
கழித்த நல் மேலாய் வாழி
ஓய்வதும் எடுத்துச் சென்று
ஒப்பரும் குடும்பத்தோடு
சீர்பெற வாழ்வமைத்து
சிறந்து நூறாண்டு
வாழ்க



*அ.எல்பேட்தாசன்*
*அபிவிருத்திச்*
*சங்க*
*செயலாளர்.*



### பங்குத் தந்தையின் வாழ்த்து

ஆசிரியர் திரு. நல்லையா நகுலநாதன் அவர்களின் யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலய சேவை நயப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழச்சியடைகின்றேன். ஆசிரியர்திரு.ந.நகுலநாதன் அவர்கள் நாவாய் மண்போற்றும் பெருமனிதர். தனது நீண்டகால ஆசிரியர் பணியினூடாக மக்கள் மனம் கவர்ந்த ஒருவர். மாணவச்செல்வங்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்த ஓர் நல்லாசான். நாவாய் மண்ணின் நீண்டகால பாடசாலைப் பணி வாழ்வில் அவருக்குக்கிடைத்த ஒவ்வொரு நாள் அனுபவமும் புதியதாகவே இருந்தது. ஏனென்றால் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக ஒரே இடத்தில் சலிப்பின்றி தன்னை அர்ப்பணித்து பணிபுரிந்துள்ளார்.

பாடசாலை மாணவ- மாணவியரின் கல்வியோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஆன்மீகத்திலும் அக்கறை கொண்டவர்தான் ஆசிரியர் என்றால் அது மிகையாகாது. இப்படியாக நாவாய் மண்ணோடும் மக்களோடும் ஒன்றாகக் கலந்து கல்விப் பணி செய்த மகானை மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

இப்படியான ஒருவர் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறுவது எமக்குக் கவலையளித்தாலும் ஆசிரியருக்கு எம் நன்றியையும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

*அருட்பணி பா.பி.இராசசிங்கம் பங்குத்தந்தை, நாவாந்துறை.*

### மனிதாபிமானமும் சேவையுணர்வும் மிக்கவர்



யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. நல்லையா நகுலநாதன் ஆசிரிய சேவையிலிருந்து பணிவோய்வு பெறும் இத்தரு ணத்தில் அவரின் அர்ப்பணம் மிக்க பணிதனை வாழ்த்தி இச்செய்தியினை வழங்குவதில் உவகையுறுகின்றேன்.

நகுலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு.ந.நகுலநாதன் அவர்கள் மனிதாபிமானமும் சேவையுணர்வும் மிக்க ஓர் கல்விப் பணியாளர். துடிப்புமிக்க விஞ்ஞான ஆசிரியராக தன் பணிதனை ஆரம்பித்து தன் அறிவு, ஆற்றல், அனுபவத்தால் சிறந்த கல்வி நிர்வாகியாக தன்னை நிலைப்படுத்தினார்.

தன் கவர்ச்சிகரமான கற்பித்தல் முறைகளால் மாணவரை ஈர்த்தது போன்று தன் அன்பான அணுகுமுறைகளால் சக ஆசிரியர்களையும் சமூகத்தையும் ஈர்த்தார். எனது மாநகரசபை எல்லைக்குட்பட்ட வனப்பு மிகு கடலோர நாவாந்துறைப்பிரதேசத்தில் 24 வருடங்கள் அளப்பரிய சேவைதனை விருப்புடன் ஆற்றிபிரதேச மக்களின் அபிமானத்தைப் பெற்றார். ஆசிரிய தொழிற்சங்கவாதியாகவும் தன்னலமற்ற சேவையாற் றினார். இத்தகைய முன்னுதாரண ஆசிரியரை சகல சௌபாக்கியங் களுடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன். அவரின் சமூகப்பணி தொடர ஆசிக்கின்றேன்.

*திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,*
*யாழ்.மாநகரமுதல்வர், யாழ்.மாநகரசபை*

### சிறந்த முகாமைத்துவ தலைவர்



எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபராக அரும்பணியாற்றிய உயர்திரு நல்லையா நகுலநாதன் அவர்கள் தனது சேவையின் 36 வருடங்களில் எமது பாடசாலையில் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்பான சேவையை நல்கியதோடு ஆசிரியர்களின் நலன்களுக்காக தன்னையே அர்ப்பணிப்புச் செய்த தொழிற்சங்கவாதியாவார்.

எமது ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் சிரேஷ்ட அங்கத்தவரான அவர் நலன்புரிக் கழகத்தின் காப்பாளராக எம் சகல முன்னெடுப்புக்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எமக்கு வழிகாட்டியவர். நிர்வாக மேலாளராகவும் சிறந்த முகாமைத்துவ தலைவராகவும் பேச்சு ஆற்றலால் மற்றவர்களை தம்பக்கம் ஈர்க்கும் அற்புத ஆற்றல் உடையவராகவும் வாதப்பிரதிவாதங்களின்மூலம் சிறந்த தீர்ப்பை வழங்கும் நீதியாளராகவும் அன்புடனும் பண்புடனும் எம்முடன் சேவையாற்றி எமது வித்தியாலயத்தின் வரலாற்றின் பக்கங்களில் நீங்காத ஒரு இடத்தைப் பெற்றுள்ளார். எங்கள் பிரதி அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் அன்பும் வழிகாட்டலும் என்றும் எம்முடனிருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அவரின் ஓய்வுக்காலத்தில் அவர் தம் குடும்பத்துடன் நிறைவான செல்வங்களைப் பெற்றுவாழ இறையருள் வேண்டுவதோடு வாழ்வும் நலனும் என்றும் சிறக்க சக ஆசிரியர்களோடு இணைந்து வாழ்த்துகின்றேன்.

*திரு.க.சுகுந்தன், தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்,*
*யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.*



### பதவிகளுக்கு ஆசைப்படாதவர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூத்த சகோதரராக எம்மை வழிப்படுத்தி சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த நல்ல மனிதர் திரு. நல்லையா நகுலநாதன் அவர்கள். சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக, கிளைச்செயலாளராக, மாவட்டச் செயலாளராக தாய்ச்சங்கத்தின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினராக விளங்கிய நல்லதொரு தொழிற்சங்கத்தோழர்.

நீண்டகாலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் ஆசிரியராக, பிரதி அதிபராக பணியாற்றியது பெருமைக்குரிய விடயம். வித்தியாலய சமூகத்தின் நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொண்ட நல்ல ஆசிரியர். பதவிகளுக்கு ஆசைப்படாமல் பிறர் நலனிலும் மாணவர்களின் நலனிலும் அக்கறைகாட்டிய திரு.ந.நகுலநாதன் அவர்களைப் போன்ற ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் உருவாகுவதென்பது நடைபெறாத காரியமென்றே சொல்லவேண்டும்.

ஆசிரியர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு நல்ல உதாரண புருஷராக வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.ந.நகுலநாதன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் மனையாளுடனும் குழந்தைகளுடனும் பல ஆண்டுகள் ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன். எப்பொழுதும் தொழிற்சங்கத் தோழனாக, உறவினனாக வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

*சரா புவனேஸ்வரன், பொதுச்செயலாளர்*
*இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.*

**மலர் அனுசரணை : ஆசான்கள் யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து தரிப்பிடம் அமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகளுக்கு தரிப்பிட நிலையம் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

மேற்படி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் இன்னமும் பேருந்துகளுக்கான தரிப்பிட நிலையம் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

ஆயினும் முல்லை.மாவட்ட செயலகத்திற்கு முன்பு தற்காலிகமாக மரநிழல்களின் கீழ் நேரக் கணிப்பாளருக்கு மட்டும் கூடாரம் அமைக்கப்பட்டு பேருந்து தரிப்பிட நிலையம் இயங்கி வருகின்றது.

அன்றாடம் கொழும்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை போன்ற பல மாவட்டங்களுக்கான சுமார் 500 இற்கும் மேற்பட்ட பயணிகள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு மலசலகூட வசதிகள், குடிநீர் வசதி, நேர அட்டவணை, இளைப்பாறக் கூடிய வசதிகள், சுற்றி வேலிகள் எவையும் இல்லாமையால் தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறாக வசதிகளின்றி காணப்படுகின்ற பேருந்து தரிப்பிட நிலையத்திற்கு முக்கியமாக நேர அட்டவணையை இடுமாறு கோரிக்கை விடப்படுகின்றது. இதனால் பயணிகள் நேரம் தெரியாமல் முன்னதாகவே வந்து காத்திருக்க வேண்டிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

அத்தோடு பேருந்து நிலையத்தை இனங்காணக்கூடியவாறு பெயர்ப்பலகை இடப்படவில்லை. வெளிமாவட்டத்திலிருந்து வருகின்ற பேருந்துகள் நிறுத்தி வைப்பதற்கென இடம் ஒதுக்கப்படாமையால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அடுத்து வருவது மழை காலம் என்பதால் பயணிகள் தங்குவதற்கு ஏதுவாக கூடாரமொன்றை துரிதகதியில் அமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே, நிரந்தரமாக பேருந்து நிலையத்தை சகல வசதிகளுடன் அமைத்துத் தருமாறு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபருக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-9-267)

## சிலை திறப்பு விழாவும் நூல் வெளியீடும்

(பூந்தோட்டம்)

வவுனியா கணேசபுரம் விநாயகர் வித்தியாலய சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் கணாதீபம் நூல் வெளியீட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் ப.சதாசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு. அன்னமலர், கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.கந்தையா, கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.லதாங்கி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-266)




## பாலியல் வன்புணர்வு சம்பவம்; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் காதலிப்பதாக ஏமாற்றி 15 வயது சிறுமியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த 18 வயது சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் நடைபெற்று வந்த பாலியல் வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், சட்ட உதவி ஆணைக்குழு பிரதேச செயலக குடும்ப நல ஆலோசனை பிரிவு, சிறுவர் நன்னடத்தை பிரிவு ஆகியவற்றால் நடத்தப்பட்ட பின்பு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அக்கறையுடனும் துணிச்சலுடனும் நீதிமன்றில் வழக்கு தொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வவுனியா அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்ட கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா வேப்பங்குளத்தில் வீடு கட்ட காணி வழங்கப்பட்ட அரச ஊழியர்களுடனான வீடமைப்புத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கான மின்சாரம் வழங்கல், வீதிகள் புனரமைப்புச் செய்தல், காணிக்கான உரிமைப் பத்திரம் வழங்கல், வீடுகளை துரிதகதியில் அமைத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் காணிகளைப் பெற்றுக் கொண்ட, அழைப்பு விடுக்கப்பட்டவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் வி.எம்.வி.குரூஸ் கேட்டுள்ளார். (ம-266)





கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தினால் கரைச்சி பிரதேச சபை மகாநாட்டு மண்டபத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், சிறுவர், பெண்கள் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்ட திறன் விருத்தி செயலமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் மாவட்ட உதவிச் செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையுரையாற்றுவதையும் மாவட்ட செயலக உளவளத்துணையாளர் தேவராஜா துஸ்யந்தன் விரிவுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# ஆங்கிலதின போட்டி முடிபுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

**மனனம் செய்து ஒப்புவித்தல்**

**தரம் 3**

பிரதீபன் குயின்சலா (இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), ஜீவராசா குயின்தனா (கிளி/பூநகரி சிறிவிக்னேஸ்வரா வித்தி.), அன்ரனி சாள்ஸ் அபிசாயினி (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை)

**தரம் 4**

யோகலிங்கம் யதுசன் (கிளி/ முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), கிறிஸ்துராஜன் கிறிஸ்சலோமினா (கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), றூபன் றுஜினா (கிளி/ இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை)

**தரம் 5**

தேவரஞ்சன் மயூரி (கிளி/ நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை), கௌரிதாசன் அக்சயன் (கிளி/செல்லையாதீவு அ.த.க. பாடசாலை), ஆனந்தராசா சயிராம் (கிளி/நல்லூர் ம.வி.)

**தரம் 6**

றவியுதீன் சைனாக் (கிளி/ நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை), உசாப் சியாமி (கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை), உதயகுமார் கஜிதா (கிளி/பூநகரி ம.வி.)

**தரம் 7**

சஜாத் சஸ்னா (கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்கலவன் பாடசாலை), யேசுநேசன் அமல றோஸ் (கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை), சுப்பிரமணியம் பானுசா (கிளி/ஜெயபுரம் ம.வி.)

**தரம் 8**

ஞானச்சந்திரன் அசானி (கிளி/ முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), சத்தார் பாத்திமா சக்னா (கிளி/ நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை), சத்தியசீலன் றேனுஜா (கிளி/முழங்காவில் ம.வி.)

**தரம் 9**

லோகேஸ்வரன் சிந்துஜா (கிளி/ இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), ஜீவபாலன் புஸ்பலதா (கிளி/ இரணைதீவு றோ.க.த.க பாடசாலை), அழகசிங்கம் சரண்யா (கிளி/ முக்கொம்பன் அ.த.க. பாடசாலை)

**தரம் 10**

ஜெயராமன் ரம்யா (கிளி/ முழங்காவில் ம.வி.), றினோஸ் பாத்திமா றபினா (கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை), ஜனேஸ் பாத்திமா ஜமீனா (கிளி/ நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்கலவன் பாடசாலை.)

**தரம் 11**

கிறகோரி ஜெயசீலன் கௌரி (கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), சத்தியராசா மேனகா (கிளி/ முழங்காவில் ம.வி.), சந்திரசேகரம் கிருசாந்தி (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை.

(தொடரும்...)

(ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது திறமை ஒன்று என்றாலும் அதை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்கு சமனாகும்.
- மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

# பால் காவடி, பறவைக் காவடி வடக்கிலே தேர்தல் காவடி

வடக்கு மாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்றுடன் நிறைவு பெறுகின்றது.

இருந்தும் நேற்றையதினத்தில் அனைத்துக் கட்சிகளும் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளன.

வேட்பாளர் தெரிவில், எல்லாக் கட்சிகளுமே இழுபறிப்பட்டுக்கொண்டமை, வேட்பாளர்களிடம் வேட்டு அச்சம் இல்லையென்பதை சுட்டி நிற்கும்.

சில கட்சிகள் வேட்பாளர் தெரிவில் பகைத்துக்கொண்ட துன்பங்களும் நடந்தேறியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

எதுவாயினும் வடக்குமாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் காவடிகளைத் தூக்கி தமது தோள்களில் வைத்துவிட்டனர். நாளைமுதல் அவர்களின் தேர்தல் காவடியாட்டம் ஆரம்பமாகும்.

காவடியாட்டம் என்பது தமிழர் பண்பாட்டில் மரபு ரீதியான கலைத்துவமாகும். காவடியாட்டத்தைக் கண்டபாட்டில் ஆடலாம் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. முன்கால் பின்கால், கயிறு பிடிப்பவர், நாதம், தாளம், இசை என அனைத்தும் பிசகாமல் இருப்பது அவசியம்.

அதேநேரம் அரோகரா சொல்வதிலும் தான் ஆட்டம் விறுவிறுப்படையும் என்பதால் பக்தர்களாகிய வாக்காளர்களும் காவடியாட்டத்தில் கலந்துகொள்வது சிறப்புத்தரும்.

இங்கு குறிப்பிடப்படுவது முறையான - ஒழுங்கான தேர்தல் காவடியாட்டத்தையாகும். தேர்தல் காவடியாட்டத்தின் போது அடியார்களை மகிழ்விக்கும் மதுசாரங்களும் சொர்ண புஷ்பங்களும் அபிசேகத்திற்கும் அர்ச்சனைக்கும் பயன்படவே செய்யும்.

ரமணியம்மாள் பாடியதுபோல தங்கம், வைரம், பவழம், முத்து, தவழும் ... தாங்கிக் கொண்டால் ... வாங்கிக் கொண்டால் ... என்ற வண்டாட்டங்களும் வடக்கிலே நடக்கும்.

இது தேர்தல் காவடிக்கான பொதுமை. காவடி ஆடுபவர்கள் சிறந்த ஆட்டக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற முடிபில் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளும் மிகவும் கவனம் செலுத்தியுள்ளன என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இருந்தும் நான் நல்லா ஆடுவேன் என்று நினைத்தவர்களும், உண்மையிலேயே தேர்தல் காவடி ஆட்டத்தில் துறை போனவர்களும் வெளியில் நிற்பது ஓரங்கட்டக் கூடிய செய்திகள் அல்ல.

வெளியில் நிற்பவர்கள், தம் பகை கொண்ட காவடி ஆட்டக்காரர்களை - காவடி ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள கட்சிகளை கடுமையாக விமர்சிப்பர் என்பதும் மெய்யே.

சுருங்கக் கூறின் வடமாகாண சபைத் தேர்தலில் காவடி தூக்கியவர்கள் தங்கள் முழுப்பலத்தையும் ஆட்டத்தில் காட்டவே செய்வர்.

இவர்களுக்கு நாம் சொல்லக் கூடியதெல்லாம் உருகிச் சொல்லுங்கள் ... நெருங்கிச் செல்லுங்கள் ... சந்தனம் பூசுங்கள் ... குங்குமம் சூடுங்கள் ... அரோகரா பாடுங்கள் ... வருவதைப் பாருங்கள் ... அவ்வளவுதான்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று கலைபீட மாணவர்கள் மோதல்

## ஒருவர் படுகாயம் ; தடையுத்தரவு பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம், நான்காம் வருட மாணவர்களிடையில் நடைபெற்ற அடிதடியினால் யாழ்.பல்கலை நேற்றைய தினம் போர்க்களமாக காட்சியளித்தது.

இவ் அடிதடியினையடுத்து கலைப்பீட மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் உள் நுழைவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போது விடுதிகளில் தங்கியுள்ள மூன்றாம் நான்காம் வருட மாணவர்களினை வெளியேறுமாறும் நிர்வாகம் அறிவித்துள்ளது.

மூன்றாம் வருட மாணவர் ஒரு வருக்கும் நான்காம் வருட மாணவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண் பாட்டினைத் தொடர்ந்து இருபகுதியினருக்கும் இடையே கடும் மோதலினை தோற்றுவித்திருந்தது.

இதனால் நேற்றையதினம் நண்பகல் யாழ்.பல்கலைக்கழகம் போர்க்களம் போல் காட்சியளித்தது.

இரு பகுதி மாணவர்களுக்கிடையிலும் கல்லெறித்தாக்குதல்களும் இடம் பெற்றதோடு அங்கிருந்த தலைக்கவசங்களையும் மாணவர்கள் அடித்து நொருக்கியிருந்தனர்.

இதில் ஒரு மாணவன் படுகாயமடைந்ததோடு இரு மோட்டார் சைக்கிள்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்பவத்தினை நேரடியாக கண்ணுற்ற விரிவுரையாளர் ஒருவர் தெரிவிக்கையில், விரிவுரையாளர் என்று கூடப் பாராமல் எம்மை அவமதித்து செயற்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கடந்தகாலங்களில் பல வரலாறுகளினை படைத்தவர்களாகவும் தமிழர்களின் இருதயமாகவும் இருந்துவந்த நிலையில் தற்போது இவ்வாறான கும்பல் மோதல் நடைபெற்றுள்ளது கவலையளிக்கிறது என்றார் அவர்.

இதேவேளை கலைப்பீட மாணவர்களில் இராமநாதன் நுண்கலைக் கழகம் தவிர்ந்த மூன்றாம், நான்காம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவதற்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் மறுஅறிவித்தல் வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படிமாணவர்களில் விடுதியில் தங்கும் மாணவர்கள் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் விடுதியைவிட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விதியை மீறி பல்கலைக்கழக வளவினுள்ளோ பல்கலைக்கழக விடுதியினுள்ளோ உட்பிரவேசித்தால் பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுக்காற்று விதியின் அடிப்படையில் அவர்களின் பல்கலைக்கழக தகுதி இரத்துச்செய்யப்படும்எனயாழ் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (எ-4)

# பிறவுண்வீதி தனியார் பாடசாலையில் இலத்திரனியல் பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதியிலுள்ள பிரபல தனியார் பாலர் பாடசாலையில் இருந்த இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக குறித்த பாலர் பாடசாலையின் உரிமையாளர் செ.ஜெயபாலசிங்கம் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பாலர் பாடசாலையைப் பூட்டி விட்டு சென்றிருந்தோம்.

இந்நிலையில் நேற்றுக் காலை 7.20 மணியளவில் வழமை போன்று பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருகை தந்து திறக்க முற்பட்ட போது ஏற்கனவே கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததோடு அறையினுள் வைக்கப்பட்டிருந்த அலுமாரியும் உடைக்கப்பட்டு பொருட்கள் பரப்பப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சுமார் 60ஆயிரம்ரூபா பணமும் ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாட்டில் கூறியதாக பாடசாலையின் உரிமையாளர் தெரிவித்தார்.


அத்தோடு எதிர்வரும் சனிக்கிழமை பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியை நடத்த திட்டமிட்டிருந்ததாகவும் அதற்கு சேகரிக்கப்பட்ட பணமே இவ்வாறு திருட்டுப்போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சத்திய தரிசனம்




ஆன்மீக ஒழுக்கங்களில், இல்லத்தில் இறைவனது படம் அல்லது விக்கிரகத்தை வைத்து, போற்றுவது என்பதே குறைந்தபட்ச மதிப்புடையது ஆகும். இந்தக்குறுகிய முறையானது இறைவனது அருளை ஈர்ப்பதற்கான ஆசையிலிருந்து எழுவதாகும். ஆனால் அருளானது கிருஷ்ணரது போதனைகளை அனுசரிப்பதன் வாயிலாக மட்டுமே பெறப்படுகின்றது. கிருஷ்ணர் அன்பின் சொரூபம் ஆகிறார். அவர் மிகவும் பாராட்டும் பண்பு அன்பே ஆகும். அன்பானது காருண்யம் எனும் திடமான செயல்களாக மாற்றம் கொள்ளும். காருண்யத்தை வளர்த்துக்கொண்டு இரக்கம் நிரம்பிய செயலைச் மேற்கொள்ளுங்கள்.

மனிதன் மேற்கொள்ளும் ஆன்மீக சாதனையும்கூடஅவற்றின் வெற்றியினை, சாதகன் உட்கொள்ளும் உணவின் அளவு மற்றும் தரத்தினைப் பொறுத்தது. உணவே சுறுசுறுப்பு அல்லது சோம்பல், பிரகாசம் அல்லது மங்கிய தன்மை, கவலை மற்றும் அமைதி என அனைத்தையும் நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும். சமைக்கப்படாத முளைக்கத் தொடங்கியுள்ள தானியங்களை முதலில் உண்ணத்தேர்வு செய்யப்படவேண்டும். அதிகளவில் உணவினை உட்கொள்வது ஆபத்தானது. உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களால் அவதியுறுகிறான். உடல் நோய்களைத் தவிர்த்திட மிதமான உணவு சிறந்த மருந்தாகும். கொழுப்பு மற்றும் மாவுச்சத்துக்கள் செயலற்ற தன்மைக்கு இட்டுச் செல்லும் குணத்தை ஏற்படுத்தும். உப்பு, மிளகு ஆசையை வளர்க்கும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# உருத்திராட்சை அணிந்தால் பாவம் தணியுமா?



உருத்திராட்சை அணிந்தால் பாவம் தணியும் என்று ஓர் நம்பிக்கை உண்டு. இறை நம்பிக்கையின் பாகமாகவும் இறைவன் அருகாமைக்காகவும் உருத்திராட்சம் சிலர் அணிகின்றனர். விதிப்படி உருத்திராட்சை அணிந்தால் பாவம் நீங்கும் என்றும் இறைவன் அருகாமையுண்டாகும் என்றும் நம்பியிருக்கின்றனர். கழுத்தில் முப்பத்து இரண்டு, சிரசில் நாற்பது, காதில் ஆறுவீதம், கைகளில் பன்னிரெண்டு வீதம், புஜத்தில் பதினாறுவீதம், சிகையில் ஒன்று, விருஷஸ்தானத்தில் நூற்று எட்டு என்ற கணக்கில் உருத்திராட்சம் அணிந்தால் அது பரமேஸ்வரனேயாகும் என்று நாரதரிடம் நாராயண மகரிஷி வெளிப்படுத்தும் ஒருபாகம் தேவிபாகத்தில் இடம்பெற்றுள்ளது.

விதிப்படியில்லாவிட்டாலும் உருத்திராட்சம் அணியும் நபர்கள் அநேகம்பேர் இன்றைய காலத்திலும் காணலாம். சிலர் தங்கம் அல்லது வெள்ளியால் உருத்திராட்சத்தைக் கட்டுவதுண்டு. சிலர் நூலில் கோர்த்தும் உருத்திராட்சை அணிகின்றனர். விதிப்படியல்லாமல் உருத்திராட்சை அணிவதால் சில தீங்குகள் வரலாம் என்று ஆசாரியர் வெளிப்படுத்துகின்றனர். உருத்திராட்சை அணிகின்றவர்கள் உணவு விடயத்திலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று போதிக்கின்றனர்.

உருத்திராட்சம் அணிந்திருப்பவர்கள் அசைவ உணவுகள் அருந்தக்கூடாது. போதைப்பொருட்கள், மதுபானம் முதலியவையும் பயன்படுத்தலாகாது. சிவப்பு வெங்காயம், வெள்ளைப்பூண்டு, முருங்கைக்காய் முதலியவையும் அருந்துவதில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எந்த நிலையிலும் உருத்திராட்சம் அணியத் தொடங்கலாம் என்றாலும் கிரகணம், விஷீசம்கிரமம், உத்தராயணம், [illegible] நாட்களில் உருத்திராட்சம் அணிந்தால் சகல பாவங்களிலிருந்தும் விடுதலை கிடைக்குமாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் குடும்ப வன்முறையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத் தரவிட்டுள்ளது. மேற்படிபிரதேசத்தில் குறித்த குடும்பஸ்தர் மனைவி மற்றும் பிள்ளைகளை அடித்து துன்புறுத்தி வந்தது டன் வீட்டு உபகரணங்களையும் சேதமாக்கி யுள்ள தாக மனைவியினால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்ப ட்டது.

குறித்த நபரை நேற்றைய தினம் புதன் கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னி லையில் மன்றில் பொலிஸார் ஆஜர்படுத் தினர்.ளள


வழக்கை விசாரித்த நீதவான் குறித்த சந்தேக நபரான குடும்பஸ்தரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-24)

# தங்கப் பதக்கம் வென்றுள்ளார்



(சாவகச்சேரி)

தமிழ்த்தினப்போட்டிகளில் பிரிவு 5 இற்கான தமிழ் இலக்கணப் போட்டியில் மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரிமாணவி தம்பிராசா கஜேந்தினி தேசிய மட்டத்தில் தங் கப் பதக்கம் பெற்றுள்ளார். (அ-5-29)




# தேகாரோக்கியம்மிக்க சந்ததியினருக்கான வேலைத்திட்டம் யாழில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் 90 வீதமான மாணவர்கள் சுகாதாரத்தில் மந்த கதியிலுள்ளனர் என கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.**

தேகாரோக்கியம் மிக்க சந்ததியினருக் கான வேலைத்திட்டத்தை வடக்கு மாகாண த்தில் முதன்முதலாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போசாக்கும் தேகாரோக்கிய வாழ்வும் என்ற திட்டத்தை வடக்கு மாகாணத்தில் முதன்முத லாக கல்விச் சேவைகள் அமைச்சராகிய நான் ஆரம்பித்து வைக்கிறேன்.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்தில் மந்த கதியிலுள்ள மாணவர் களின் சுகாதார நலன்களுக்காகவே இத்திட் டத்தை வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்துள் ளோம்.

இன்று இந்த நாட்டில் அனைத்து மக்க ளும் இனபேதமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

1970 ஆம் ஆண்டு கால வரலாற்றினை புரட்டிப் பார்ப்பதற்கு நாம் விரும்பவில்லை. அது பாரிய இன்னல்களையும் சவால்களை யும் கொண்டதாக காணப்பட்டிருந்தது.

ஆகவே நாம் இனி பழையவற்றை சிந் திக்காது புதிதாக சிந்திப்போம், செயற்படு வோம். வடக்கிலும் சரி தெற்கிலும் சரி தமது பிள்ளைகளை பெற்றோர்கள் பிரச்சினைக ளில் இருந்து பாதுகாக்கவே விரும்புவார்கள்.

யாழ். மாநகர சபையின் மேயர் துரைய ப்பா இறந்ததன் பிற்பாடு அரசியலில் ஒரு பெருவெளி ஏற்பட்டிருந்தது.

சேர்.பொன். இராமநாதன் போன்ற தமி ழ்த் தலைவர்களின் பாதையில் நாம் அனை வரும் செல்வோம். நான் அரசின் பக்கம் இருந்தாலும் மாணவர்களுக்கு அநீதி இழைக் கப்படும் போது மாணவர் பக்கமே நிற்பேன் என தெரிவித்த அமைச்சர் எதிர்காலத்தை மட்டும் நீங்கள் சிந்திக்காதீர்கள். தேர்தலைப் பற்றியும் சிந்தியுங்கள். மக்களுக்கு சேவை செய்பவர்களை தெரிவு செய்யுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# மாவீரர் துயிலும் இல்ல காணி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் துயில் இல்லத்தின் வழக்கு விசாரணையை நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு பருத்தித்துறை நீதி மன்றம் ஒத்திவைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளான குமரப்பா குலேந்திரன், கிட்டு ஆகியோரின் நினைவுத் தூபிகள் தீருவில் மாவீரர் துயில் இல்லத்தில் நிறுவப்பட்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு முதல் மேற்படி மாவீரர் துயில் இல்லம் தமிழீழ விடுதலைப் புலிகளி னால் அமைக்கப்பட்டு இருந்தது.

இத் துயில் இல்லத்தின் காணி அரசுக்கு சொந்தமானது என்றும் அக் காணியை வல் வெட்டித்துறை நகரசபை நகரபிதா ந.அனந் தராஜ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகர சபை உப தலைவர் கே.சதீஸ் ஆகியோர் இணைந்து வல்வெட்டித்துறை சிவன் கோவிலு க்கு குத்தகைக்கு எழுதியுள்ளதாகவும் அத்துடன் பயங்கர வாதத்திற்கு துணை போனதாகவும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரால் வழக்கு பதியப்பட்டது.

அத்துடன் 1987 ஆம் ஆண்டு முதல் தமி ழீழ விடுதலைப் புலிகளினால் துயிலும் இல்லம் பராமரிக்கப்பட்டு வந்தது.பின்னர் இராணு வம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதையிட்டு மேற்படி துயிலும் இல்லம் முற்றாக உடைக் கப்பட்டு அழிக்கப்பட்டது. இவ்வழக்கு விசா ரணை நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணை க்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன்போது பய ங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் அரசசொத்தை அபகரித்தமை, பயங்கரவாதத்திற்கு துணை போனமை, அரச அனுமதியின்றி ஆலயத்திற்கு குத்தகைக்கு மேற்படி காணியை எழுதியமை போன்ற குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர்.

மன்றில் எதிர்த்தரப்பு வாதிகளாக ஆஜராகிய மேற்படி மூவருக்கு ஆதரவாக ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணிகளான திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன், நா. சஞ்சீவன் தமது பக்க நியாயங்களை நீதவான்னிடம் எடுத்துரைத்து வாதிட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் இவ் வழக்கு உயர் நீதிமன்றில் தொடரப்பட வேண்டியது எனக் குறிப்பிட்டதுடன் இவ் வழக்கை எதிர் வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திக திக்கு ஒத் திவைக்க உத்தர விட்டார். (அ-9-24)




# வடமராட்சி வலயத்தில் குறைநிவர்த்தி சேவை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய பாடசாலைகளின் அதிபர் கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகி யோரது குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் குறைநிவர்த்தி சேவை நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தெரிவித்துள் ளார்.

மேற்படி குறை நிவர்த்தி சேவைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை வடமராட்சி வலயக்கல்வி அலுவல கத்தில் இடம்பெறும் எனவும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் தமது பதவி உயர்வு, சம்பள மாற்றம், சம்பள நிலுவை, சுய விபரக் கோவை என்பன தொட ர்பாக இக் குறை நிவர்த்தி சேவை யில் குறிப் பிடமுடியும் எனவும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (அ-5)



சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடை பெற்றது. இதன் போது தமிழகத்தில் இருந்து வருகை தந்த வைத்தியகலாநிதி ஏ.ஜி. ஸ்ரீ நிவாச சாஸ்திரிகள் ஆசியுரை வழங்குவதையும் அருகில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவ ஸ்ரீ மகேஸ் வரக்குருக்கள் [illegible] குருக்கள், ஆலய பரிபா லன சபை [illegible] அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிவங்களை ஒப்படைக்குக

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பாதணி கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத் திற்காக பாடசா லைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவங் களை பூரணப்படுத்தி இன்று வியாழக்கிழ மையோ அல்லது நாளை வெள்ளிக்கிழ மையோ வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்ப டைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸ் அறிவித்துள்ளார்.

மேற்படி படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுப் நிருபங்களின் அடிப்படையில் பூரணப்படுத்தப்பட வேண் டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# தீவக வலயத்தின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியன நடை பெறும் காலப்பகுதியில் பரீட்சை நிலையங்கள், இணைப்பு நிலையங்கள் என்பன அமைந் துள்ள பாடசாலை வளாகத்தில் ஏனைய செயற் பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அவ்வாறன்றி தவிர்க்க முடியாத செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப் பங்களில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அனுமதி பெறப்படுதல் வேண்டும் எனவும் அவர் குறிப் பிட்டார். (அ-5)

# 128 ஓட்டங்களால் வீழ்ந்தது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 128 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடியது.

இதில் 3 போட்டிகளில் இலங்கை அணியும் ஒரு போட்டியில் தென்னாபிரிக்க அணியும் வெற்றி பெற்றிருந்த நிலையில், 5வதும் இறுதியுமான போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்றது.




இதில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தது.

இலங்கை சார்பாக சிறப்பாக துடுப் பெடுத்தாடிய டில்ஷான் 99 ஓட்டங்களையும், லகிரு த்ரிமானே 68 ஓட்டங்களையும், சங்கக்கார ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங் களையும் விலாசினர்.

இறுதியாக இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது.

இதன்படி 308 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 43.5 ஓவர்களில் 179 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

இலங்கை அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய சுரங்க லக்மால் மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக் களை வீழ்த்தினார். அத்துடன் சஜித்திர சேனாநாயக்க 2 விக் கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை அணி 4-1 எனக் கைப்பற்றியுள்ளது.

நேற்றைய போட்டியின் சிறப் பாட்டக் காரராக டில்ஷான் தெரி வானதோடு, தொடரின் சிறப்பாட்டக் காரராக சங்கக்கார தெரிவுசெய்யப்பட்டார்.

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

Matrix Homes அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை, நேற்றுப் புதன்கிழமை ஆகிய தினங்களில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப் பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண் டன.

இப்பரபரப்பான ஆட்டத்தில் யாழ்ப்பா ணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 69:56 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நேற்று நடைபெற்ற இன்னொரு அரை யிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூ ரியும் மோதிக் கொண்டன.

இவ் ஆட்டத்தில் ஆரம்பம் முதலே தமது ஆதிக்கத்தினை வெளிப்படுத்திய யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரி அணி 84:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப் போட்டியானது வரும் 3-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய அணிகள் மோதவுள்ளன. (23)

## 'சுதந்திர தேசம்-தொலைதூரம்'

### சொற்பதத்தில் சர்ச்சை

(யாழ்ப்பாணம்)

கல்விச் சேவைகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கட்டப் பட்டிருந்த பிரதான பனரில் **சுதந்திர தேசம் தொலைதூரம்** எனும் வாசகம் பதிவு செய்யப பட்டுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் நேற்றுக் காலை கல்விச் சேவைகள் அமைச்சினால் மாணவர்கள், ஆசிரியர், பெற்றோருக்கான நிகழ்வொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந் திருந்ததற்கு பின்புறமாகவே குறித்த பனர் கட்டப்பட்டிருந்தது.

இது யாரால் அச்சிடப்பட்டது என வட மாகாண சபை கல்வியமைச்சின் உயரதி காரி ஒருவரினை கேட்டபோது அது கொழும் பிலிருந்து வந்தவர்களாலேயே கொண்டு வரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அவ் பனரில் காணப்பட்ட வாசகம் சுதந் திர தேசத்தினைக் காண்பதற்கு நீண்ட காலம் எடுக்குமா? என்ற பதத்தினை தோற்று விக்கின்றன. என அங்கிருந்தவர்களால் முணு முணுக்கப்பட்டது.

இதேவேளை இந் நிகழ்வில் விருந்தி னர்கள் தமிழ் கலாசார முறைப்படி மாலை அணிவித்து வரவேற்கப்படாமல் பௌத்த முறைப்படி வெற்றிலை கொடுத்தே வரவேற் கப்பட்டிருந்தனர்.

மேலும் இந்நிகழ்வில் பௌத்த மதகுரு மார்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதகுருமார்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. (செ-4)

## சதுரங்கப் போட்டி

ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்படு கின்ற வட மாகாணத்திற்கான சதுரங்கப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து கல்லூ ரியில் ஆரம்பமாகவுள்ளது.

3ஆம் திகதி 3 சுற்றுகளும், 4ஆம் திகதி 2 சுற்றுக்களுமாக மொத்தம் ஐந்து சுற்றுக் களாக இப் போட்டி நடைபெறும்.

இதில் 8, 10, 12, 15 மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட (திறந்த சுற்று) ஆண் பெண்களுக் கான தனித்தனிப் போட்டிகள் நடைபெறும்.

இதில் தெரிவு செய்யும் போட்டியாளர்கள் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 4ஆவது கண்டி சர்வதேச சதுரங்க திறந்த சுற்றுப் போட்டி 2013 இல் பங்குபற்ற வாய்ப்பளிக்கப் படும்.

விண்ணப்பதாரர்கள் போட்டி நடைபெறும் அன்று 8.00 மணிக்கு முன்பதாகச் சமுக மளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

போட்டிக்கான கட்டணம் இலவசம் என் பது குறிப்பிடத்தக்கது.

## புங்குடுதீவில்....

கடற்கரைப் பகுதியில் இந்தச் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுக் காலை பொதுமக்களினால் கடற்படையினருக்குக் கொடுக்கப்பட்ட தக வல்களையடுத்து கடற்படையினரின் உதவி யுடன் இந்தச் சடலத்தை பொலிஸார் மீட்டுள் ளனர். சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்பது நேற்று இரவுவரை இனங் காணப்பட வில்லை.

இதேவேளை கடந்த 24ஆம் திகதி யாழ். நெடுந்தீவு மூன்றாம் வட்டாரம் கடற்கரைப் பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## இளைஞனை....

செய்யப்பட்டுள்ளது.

யாழ்.கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த தேவராஜா சதீஸ என்ற இளைஞனே கடந்த 4ஆம் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ள தாக முறைப்பாட்டில் அவரது சகோதரன் தெரிவித்துள்ளார்.

கடைக்குச் சென்றுவிட்டு வருவதாக கூறி சென்ற நிலையில் குறித்த இளைஞன் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (செ-6)

## தெரிவுக்குழு மூலமான....

சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நிகழ்வு நடந்து முடிந்திருக்கிறது.

எங்களுடைய அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுடைய கூட்டாக ஈ.பி.டி.பி போட்டியிடுகிறது. இந்தக் கூட்டு வெற்றி பெறும் என நம்புகின்றேன்.

அது வெல்லும் பட்சத்தில் எங்களுடைய மக்களுடைய பிரச்சினைகளை கணிசமான அளவு தீர்க்க முடியும்.

கடந்த கால யுத்த சூழலில் எவ்வாறு நாம் செயற்பட்டோம். அதற்குப் பிறகு எவ்வாறு செயற்பட்டோம் என்பது எல்லோருக்கும் தெரியும். எந்தளவுக்கு எந்தளவு எங்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்கின்றதோ அந்தளவுக்கு மக்களுக்கு சேவைகளாக, பயன்களாக அமையும்.

அந்தவகையில் மக்கள் வரவிருக்கும் தேர்தலில் சரியானவர்களைத் தெரிவு செய்தால் எங்களுக்கு அந்த ஆணையை வழங்கினால் மூன்றிலிருந்து ஐந்து வருடத் திற்குள் வடக்கு மாகாணத்தை செல்வம் கொழிக்கும் அல்லது வளம் கொழிக்கும் மாகாணமாக மாற்றுவோம்.

குட்டி ஜப்பானாக, குட்டி சிங்கப்பூராக மாற் றுவோம் என்பது எங்களுடைய நம்பிக்கை.

எனவே சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் சுதந்திர மான தேர்தலை எதிர்கொள்ள இருக்கின் றீர்கள்.

மேலும் தமிழர்களுக்கான அரசியல் உரிமைப் பிரச்சினையுள்ளது. இது தொடர் பாக அமைச்சரவையில் பலமுறை நான் பேசியிருக்கிறேன்.

அத்தோடு பலமுறை கலந்துரையாடியிருக கின்றோம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்.

அந்த் வகையில் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக ஏற்கெனவே நான் சொல்லிவந்த 13-வது திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொண்டு அதை நடைமுறைப் படுத்துவதன் ஊடாகவும் மேலும் வலுப் படுத்துவதன் ஊடாகவும் எமது நடவடிக்கை அமைந்திருக்கும்.

அந்த வகையில் ஜனாதிபதி தலைமை யிலான அமைச்சரவை முடிபெடுத்து நாடா ளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைத்து தெரிவுக்குழுவின் சிபாரிசுக்கு விட்டுள்ளது.

இதில் எதிர்க் கட்சிகள் துரதிர்ஷ்டவசமாக கலந்து கொள்ளவில்லை. ஏனென்றால் எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரை அவர்கள் எதிரிக் கட்சிகளாக செயற்படுகின்றன. அத்தோடு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சி னைகளைத் தீர்க்க வேண்டும் என்று கருத வில்லை என்பதனாலும் இதில் பங்கு கொள்ள வில்லை எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவிற்குழுவில் எதிர்க் கட்சிகள் பங்கு கொள்ளுமாக இருந்தால் இன்னும் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

எது எவ்வாறு இருந்தாலும் அவர்கள் நாடாளுமன்ற தெரிவிற்குழுவிற்கு வரா விட்டாலும் நாங்கள் மக்களுடைய பிரச்சி னைகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழு வின் ஊடாக நிச்சயம் தீர்வு காண்போம்.

அடுத்து காணி சம்பந்தமான பிரச்சினை கள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினருடனும் கலந்துரையாடியிருக் கின்றோம்.

எனவே தமிழ் மக்களுடைய காணி களை எவ்வளவு வேகமாக கட்டம் கட்டமாக விடுவிக்க முடியுமோ அந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## அரசாங்கத்தை தோற்கடி....

வெறுப்புடன் நடைபெறவுள்ள வடக்குத் தேர்தலில் பல்வேறு முறைகேடுகளை பயன்படுத்தி அரசு வெல்ல வாய்ப்புணடு. அதேவேளை தேர்தலினை நடத்தாமல் செய் வதற்குரிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் இந்த நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றது. ஆனால் குற்ற வாளிகள் கைது செய்யப்படுவதுமில்லை தண்டிக்கப்படுவதுமில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இந்த நாட் டில் பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் இல்லை. இது எந்தவகையில் நியாயம்? இங்கு ஜனநாயகத் தேர்தலில் போட்டியிடு வதற்கு யாழ்ப்பாணம் வந்தாலும் இராணு வப் புலனாய்வுப் பிரிவினர் எம்மை அச்சுறுத்து கின்றனர்.

இவ்வாறு அடக்குமுறை உச்சக்கட்டத் திலேயே இந்த நாடு உள்ளது. நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கோ அல்லது தமிழ் கட்சிகளிற்கோ வாக்களிக்காதீர்கள் என நாம் கூறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக் களிப்பவர்கள் வாக்களியுங்கள். ஐக்கிய தேசி யக்கட்சிக்கு வாக்களிப்பவர்கள் அதற்கு வாக் களியுங்கள்.

ஆனால் அரசுக்கு எதிராகத்தான் வாக் களிக்க வேண்டும். வாக்களிப்பவன் தமிழ னாக இருந்தால் அவன் கட்டாயம் அரசுக்கு எதிராகத்தான் வாக்களிப்பான்.

இந்த நாட்டில் தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டுமாயின் தற்போதைய அரசாங் கத்தினை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என் றார். (செ-4)

## படவிருதுக்கான....

கொலைக்களங்கள் ஆவணப்படத்துடன் சிரிய போர் அவலம், காஷ்மீர் சித்திரவதை, ஜோர்தானின் நிலை மற்றும் கத்தோலிக்கத் திருச்சபை முதலானவற்றை மையப்படுத் திய ஆவணப் படங்களும் தெரிவு செய்யப்பட் டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் கடும் எதிர்ப் பையும் மீறி போர் தவிர்ப்பு வலயம் - இலங்கையின் கொலைக்களங்கள் என்ற ஆவணப்படம் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த ஜனவரி மாதம் 3-ம் திகதி திரையிடப்பட்டி ருந்தது.

இந்த ஆவணப்படத்தை இலங்கை அரசாங் கம் நிராகரித்திருந்த போதிலும், இதில் காணபிக்கப்பட்டுள்ள பதிவுகள் சர்வதேச சமூகத்தின் அதீத கவனத்துக்கு உள்ளா கியுள்ளது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரன் படைத் தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மைக்கான ஆதாரங்களும் இந்த ஆவணப் படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இரண்டு ஆவணப்படங்களை பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி ஆதாரங்களுடன் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 2015
தொழில் நுட்பவியல் பாடநெறிகள்
புதிய பிரிவுகள்
Engineering Technology
Bio - Systems Technology
Science For Technology
ICT ஆரம்பம் : 03.08.2013
காலை 10 மணி
DCM யாழ்.நகர்

# இலங்கையின் தகவலை....

கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனேடிய வெளிவிவகார அமைச்சர் கலந்து கொள்வதை உறுதிப் படுத்தியுள்ளதாக இலங்கை ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும், வெளிவிவகார அமைச்சைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பிலுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் உள்ளிட்ட 85 சதவீதமான நாடுகளின் பிரதி நிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்ட சஜின்வாஸ் குணவர்த்தன, இம்மாநாட்டில் கனேடிய பிரதமரும் பங்கேற்பதை உறுதிப்படுத்துவார் என்று நம்புகிறோம் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், சஜின்வாஸ் குணவர்த்தன வெளியிட்ட தகவலை கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் நிராகரித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்டின் பேச்சாளர் றிக்றோத், பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதா என்பதை அமைச்சர் ஜோன் பயார்ட் இதுவரை முடிவு செய்ய வில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளார்.

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளை தொடர்ந்தும் கண்காணிக்கும். கனடா, அதனை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களை மேலும் அதிகரிப்பதற்கு எதைச் செய்ய முடியுமோ அதை தொடர்ந்து செய்யும்.

எமது கவலைகள் தொடர்பில் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என கனேடியப் பிரதமர் தெளிவாகக் கூறியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் கனேடிய அரசாங்கத்தின் முழுப் பிரதிநிதிகளும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வது மிகவும் சிக்கலானது" என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்டின் பேச்சாளர் றிகறோத் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

விரும்பிய நாட்டில் Work Permit உடன்
வேலைவாய்ப்பு...
அனுமதி பெற்ற 15 மாணவர்களுக்கான
விசா வழங்கல்
அனுமதி இலவசம்
மற்றும்
புதியவர்களுக்கான விளக்கக் கருத்தரங்கு &
உடனடி அனுமதி வழங்கல்
உலகம் முழுவதும் சுற்றியபடி அமெரிக்க டொலரில் சம்பாதிக்கும் கப்பல் வேலைவாய்ப்பு
3 ஸ்டார் 5 ஸ்டார் ஹொட்டேல்களில் கௌரவமான நிரந்தர வேலைவாய்ப்பு
இவற்றுடன்
மிகக்குறைந்த செலவில் தொழில் உத்தரவாதமான சர்வதேச பல்கலைக்கழகக் கற்கைநெறிகள்...
27.07.2013 அன்று ஒரு தொகுதியினருக்கு விசா வழங்கப்பட்ட போது...



காலம்: 03.08.2013 சனி காலை 9 மணி
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
(C-4186)
பதிவுகளுக்கு 077 3616 798

தேவை
நல்லூரில் அமைந்துள்ள பொதிகள் அனுப்பும் காரியாலயத்திற்கு பெண் ஊழியர் ஒருவர் தேவை.
(நல்லூர் பிரதேசத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது)
0773818799 (3514)

வீட்டுப் பணிப்பெண் தேவை
நல்லூரில் உள்ள வீடொன்றுக்குப் பணிப் பெண் தேவை.
நாள் ஒன்றுக்கு 500/=
தொடர்பு: ரஜித்தா
0776564346 (3514)

தேவை
வடமராட்சி பருத்தித்துறையில் இயங்கும் பிரபல அச்சகமொன்றுக்கு ரைப் செட்ரிங் (Type Setting) தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 832 9477, 021 226 0055
(சி-4184)

# ஆளும் கட்சியின்....

சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் சிலர் கட்சிகளை ஆரம்பித்து விட்டு தேர்தலில் தாம் தான் வெற்றி பெறுவோம் என்று மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

ஆளும் கட்சியான மக்கள் சுதந்திர முன்னணி ஏனைய மாகாணங்களில் இடம் பெற்ற தேர்தல்களில் எவ்வாறு வெற்றிபெற்று ஆட்சியினை பொறுப்பேற்றதோ அதே போன்று நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபை தேர்தலிலும் நிச்சயம் வெற்றிபெறும்.

அரசியல் அனுபமில்லாதவர்களின் கருத்துகளுக்கு மக்கள் செவிசாய்க்கக் கூடாது.

மக்களோடு மக்களாக இருந்து சேவையாற்றுபவர்களை தெரிவு செய்ய வேண்டும். அத்தகையவர்களையே வேட்பாளர்களாக எமது கட்சி நிறுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஆளும் கட்சி...

நாகன் கணேசன், அகிலதாஸ் சிவக்கொழுந்து, நா.பொன்னம்பலம், கதிரவேலு செவ்வேள், மொகமட் சுல்தான் சுபியான், குமார் சர்வானந்த், அப்துல் கமிட் நுஃமான் சீராஸ் முகமட் ஆகியோர் வேட்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களும் தமது கட்சியில் இணைந்து போட்டியிடுவதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார். (செ-6)

## மரண அறிவித்தல்

### சகோதரன் ரவிந்தன் (சகோ.ரவி)

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சார்ந்த சகோதரன் பரமசிவம் ரவிந்தன் (சகோ.ரவி) அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் அடக்க ஆராதனை ஆவணி மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இல.111, கண்டி வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபைச் சாலையில் நடைபெறும்.

அடக்கம் கொட்டடியில் உள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபையின் சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
பாஸ்டர் ஜோசேப் பாலச்சந்திரன்

(3510)

## Obituary Notice

### Brother Ravinthan (Bro.Ravi)

Bro.Paramasivam Ravinthan Lovingly Called Bro.Ravi of the Ceylon Pentecostal Mission entered golory. The Funeral Service will be held in the Mission hall, 111 Kandy road, Chundukuli at 9 a.m on Friday the 2nd of August.

Burial in the Ceylon Pentecostal Mission Cemetery at Koddady.

*Informant*
Pastor. Joseph Balachendran

(3510)

மிக உயர்தரம் கொண்ட
மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கு தேவையான யாழ் நாகர் கோவில் மணல் உள்ளடங்கலாக மணல் தேவைப் படுபவர்கள் குறிப்பிட்ட இடங்களிலேயே விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வட பிராந்தியக் காரியாலயம்.
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.
0770035091 (விண்ணன்) 0770035088 (முருகதாஸ்)
0770035092 (பகீரதன்) 0770035110 (கிரி)
(சி-4176)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
[illegible]
(C-4155)

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச Certificates இனை பெறலாம்
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007)
இது வரைக்கும் 718 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
ஆரம்பம் : 03.08.13 Sat at 10 am
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).
ஆரம்பம் 05.08.13 Mon at 3.30pm
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
ஐரோப்பிய French (DELF) பரீட்சையில் எம்மிடம் அதிகமானோர் சித்தி..
0779 789 456
DEUTSCH,IELTS,B1,ITALIAN, & SINHALA CLASSES......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.